வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 01 15.11.2021 திங்கட்கிழமை இதழ் : 345 பக்கங்கள் : 16

# சுரேஷ் சாலே அவமதிப்பு வழக்கு:
# ஜஸ்மின் சூகாவுக்கு அழைப்பாணை; கொழும்பு நீதிமன்றம் அனுப்பியது!



கொழும்பு, நவம்பர் 15

அரசாங்க புலனாய்வு பிரிவின் தலைவர் சுரேஷ் சாலே தாக்கல் செய்த தன் மீதான அவமதிப்பு வழக்கில் அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு ஜஸ்மின் சூகாவுக்கும் பிரித்தானியாவை சேர்ந்த மேலும் இருவருக்கும் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

15



## நிதியமைச்சரின் கருத்தால் அரச ஊழியருக்கு அவதூறு

### எதிர்க்கட்சி தலைவர்

கொழும்பு, நவ. 15

அரச ஊழியர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அவதூறை வன்மையாகக் கண்டிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

அரச சேவையை நாட்டினால் சுமக்க முடியாதுள்ளதாகவும் அது நாட்டிற்கு

15

## சீன உரத்தை மீண்டும் பரிசோதிக்க இணக்கம்!

கொழும்பு, நவ. 15

பாதகமான நுண்ணுயிர்கள் அடங்கியுள்ளமை என்று இரு தடவைகள் உறுதிப்படுத்தப்பட்ட சீன உரத்தை மூன்றாம் தரப்பு ஒன்றால் மீண்டும் பரிசோதிக்க இலங்கை இணக்கம் தெரிவித்துள்ளது என இலங்கைக்கான சீனத் தூதரகம் கூறியுள்ளது.

சீனாவிலிருந்து சேதன பசளையின்

15

## மக்களுக்கு சேவையாற்றவே அதிகாரிகள்; அரசியல்வாதிகள் சொல்வதை செய்யவல்ல

### ஓய்வுநிலை அரச அதிபர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், நவ. 15

அரச அதிகாரிகள் மக்களுக்கு சேவையாற்றவே தவிர அரசியல்வாதிகள் சொல்வதை செய்யவல்ல என்று யாழ். மாவட்ட ஓய்வு நிலை அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

அளவெட்டியூர் தத்துவஞானி கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற தனது சேவை நயப்பு விழாவில் கலந்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும்,

"நான் இன்று ஓய்வு பெற்றிருக்

15

## மீண்டும் உயர்கிறது கொரோனா மரணம்!

கொழும்பு, நவ. 15

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் மட்டும் 23 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இறந்தவர்களில் 30 - 59 வயது பிரிவில் 4 ஆண்களும், 2 பெண்களுமாக 6 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 6 ஆண்கள், 11 பெண்களுமாக 17 பேரும் உயிரிழந்தனர்.

இந்த மரணங்களுடன் நாட்டில் உயிரிழந்த மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 995ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## ஐ. நா. விசேட அறிக்கையாளர் இம்மாதம் இலங்கை வருகிறார்!

நியூயோர்க், நவ. 15

அடிமைத்துவத்தின் சமகால வடிவங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு எதிர்

15

## தமிழ் பேசும் கட்சிகளை ஓரணியில் அழைக்கிறார்!

### த. தே. கூட்டமைப்பின் தலைவர்

கொழும்பு, நவ. 15

தமிழ் பேசும் கட்சிகளை ஒரு தளத்தில் அணி திரட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் தற்போது அமெரிக்கா சென்றுள்ள எம். ஏ. சுமந்திரன் எம். பி. நாடு திரும்பியதும் முன்னெடுக்கப்படும் என்று கூட்டமைப்பின்

15

## சவேந்திர சில்வாவுக்கு தடைவிதிக்க பிரிட்டன் ஆதரவு அளிக்க வேண்டும்!

### கோருகிறார் அந்த நாட்டின் எம். பி சாரா





லண்டன், நவ. 15

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு எதிராக தடைவிதிப்பதற்கு ஆதரவளிக்குமாறு பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் சாரா

15

# தமிழரின் நினைவுநாளை ஒரு மதத்தவர் முடிவு செய்வதை எப்படி அனுமதிக்கலாம்?

## கலாநிதி ஆறு. திருமுருகன் கேள்வி

06




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# அத்தியாவசிய பொருட்களுக்கு வரி விதிப்பு எதுவுமே கிடையாது

## நிதி அமைச்சர் பஸில் உறுதி

கொழும்பு, நவ. 15

பொருட்கள் மீதான உத்தேச வரிகளில் அத்தியாவசிய பொருட்கள் எதுவும் உள்ளடக்கப்படாது என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், புதிய வரி விதிப்புக்களில் சூதாட்டம், மதுபானம் போன்றனவே அடங்கும் என கூறினார்.

அத்தியாவசிய பொருட்களுக்கு வரி விதிக்கப்படமாட்டாது என்றும் சீனி வரி திருத்தப்படாது என்றும் நிதியமைச்சர் உறுதியளித்துள்ளார்.

1947ஆம் ஆண்டிலிருந்து பொருட்களின் விலை அதிகரிப்பு என்பது ஒரு பிரச்சனை என சுட்டிக்காட்டிய அவர், எந்த அரசாங்கமும் குறைக்க முன்வரவில்லை என்றும் கூறினார். (அ)

# அரச கட்டமைப்பு ஊழல் மோசடி குறித்து ஆதாரங்களுடன் அறிவித்தால் நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

வடக்கு மாகாணத்தின் அரச கட்டமைப்பில் காணப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பாக ஆதாரங்களுடன் அறிவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்கே அரச கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன என சுட்டிக்காட்டிய ஆளுநர், தான் பதவியேற்றதில் இருந்து வடமாகாண அரச கட்டமைப்புக்களின் பல்வேறு மட்டங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ளதாக கூறினார்.

அரச கட்டமைப்பில் காணப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பாக சிலர் தன்னைத் தொடர்பு கொள்ளவதற்கு அல்லது சந்திப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அறிய கிடைத்துள்ளது என ஆளுநர் தெரிவித்தார்.

ஆகவே ஊழல், மோசடிகள் தொடர்பாக ஆதாரங்களுடன் எவரும் தன்னை நேரடியாக சந்தித்தோ அல்லது தொடர்புக் கொண்டோ தகவல்களை வழங்க முடியும் என ஆளுநர் ஜீவன் தியாகராஜா குறிப்பிட்டார்.

அவ்வாறு தகவல்கள் வழங்கப்படும் பட்சத்தில், உரிய விசாரணைகளை மேற்கொண்டு பாரபட்சமின்றி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தயாராக இருப்பதாகவும் வடக்கு ஆளுநர் தெரிவித்தார். (அ)

# 65 ஆயிரத்து 704 குடும்பங்கள் சீரற்ற காலநிலையால் பாதிப்பு

கொழும்பு, நவ. 15

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இதுவரையில் 65 ஆயிரத்து 704 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலை காரணமாக 17 மாவட்டங்களில் உள்ள, 150 பிரதேச செயலகப் பிரிவுகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, பதுளை, நுவரெலியா, மாத்தளை, கம்பஹா, கொழும்பு, மன்னார், இரத்தினபுரி, களுத்துறை, புத்தளம், அநுராதபுரம், யாழ்ப்பாணம், காலி, கேகாலை, குருணாகல், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களே பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த மாவட்டங்களில் உள்ள 65 ஆயிரத்து 704 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 30 ஆயிரத்து 640 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

மேலும் இயற்கை அனர்த்தங்களில் சிக்கி இதுவரையில் 26 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில், புத்தளம் மாவட்டத்தில் 7 பேரும் கேகாலை, குருநாகல் மாவட்டங்களில் தலா 6 பேரும் பதுளை மாவட்டத்தில் நால்வரும் மாத்தளை, காலி, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தலா ஒவ்வொருவரும் உயிரிழந்தனர். மேலும் அனர்த்தங்கள் காரண மாக 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேநேரம், 49 வீடுகள் முழுமையாகவும், ஆயிரத்து 574 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 10 . 1947



மறைவு
06 . 11 . 2021

## திருமதி இராசபூபதி சின்னையா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாழ், சரசாலை, மட்டுவில், தெல்லிப்பழை, சுன்னாகம், மாவிட்டபுரம், ஏழாலை ஆகிய இடங்களை வதிவிடங்களாகவும் கொண்ட திருமதி இராசபூபதி சின்னையா அவர்கள் கடந்த 06.11.2021 (சனிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிள்ளைநாயகம் - தங்கம் தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னையா அவர்களின் அன்பு மனைவியும் இராமச்சந்திரன், இராமேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் குமாரகுருபரன் (சுவிஸ்), கிருபாகரன் (லண்டன்), சோமஸ்கந்தன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும் துஷந்தி (சுவிஸ்), ஞானகௌரி (லண்டன்), யோகேஸ்வரி, செல்வி நாட்சாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும் திலகவதி, வசந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் புவன், அதுர்வன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.11.2021) திங்கட்கிழமை மதியம் 2.00 மணியளவில் ஏழாலையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (8624)

சிவகுரு வீதி,
ஏழாலை மத்தி, ஏழாலை.
077 899 6814

தகவல்:-
தாட்சாயினி கந்தசாமி
நவநீதராஜா (ஜெயா)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், நவ. 15

தெல்லிப்பழை - இளாவளை - சிறுவிளான் ஸ்ரீஜயப்ப மணிகண்டன் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்து பக்தர்கள் பங்கேற்க முடியும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம் 08 கார்த்திகை 2021

**“மரம்தான் மரம்தான் எல்லாம் மரம்தான் மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான் மனிதன் மனிதனாக வேண்டுமா மரத்திடம் வா... ஒவ்வொரு மரமும் போதிமரம்!”**

**-கவிஞர் வைரமுத்து**

கல்வி tv CHANNEL-1

**15.11.2021 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**15.11.2021 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
15.11.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# மொகான் பீரிஸின் தோல்வி ?

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சட்ட ஆணையகத்திற்கான உறுப்பினர் தெரிவில், மொகான் பீரிஸ் தோல்வியடைந்திருக்கின்றார். ஐந்து வருடங்களை கொண்ட உறுப்பினர்களுக்கான தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றிருந்தது. இரகசிய வாக்கெடுப்பின் மூலமே குறித்த தெரிவு இடம்பெற்றிருந்தது. குறித்த சட்ட ஆணைக் குழுவில் நிலவிய 34 ஆசனங்களுக்கான புதிய உறுப்பினர்களை தெரிவுசெய்யும் நோக்கிலேயே குறித்த வாக்கெடுப்பு இடம்பெற்றிருந்தது. ஆசிய - பசுபிக் பிராந்தியத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் எட்டு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த எட்டு ஆசனங்களுக்கான போட்டியிலேயே, மொகான் பீரிஸ் போட்டியிட்டிருந்தார்.

மொகான் பீரிஸ், இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில், பிரதம நீதியரசராக இருந்த சிராணி பண்டாரநாயக்க நீக்கப்பட்ட பின்னர், அவரின் இடத்திற்கு மொகான் நியமிக்கப்பட்டிருந்தார். மொகான் பீரிஸை இவ்வாறானதொரு பதவிக்கு பொருத்தமற்றவர் - அவரை தெரிவு செய்ய கூடாதென்னும் அடிப்படையில் தென்னாபிரிக்காவை தளமாகக் கொண்டியங்கிவரும், ஜஸ்மின் சூக்கா தலைமையிலான உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச திட்டம் என்னும் அமைப்பினர், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அத்துடன், இது தொடர்பில் சர்வதேச அளவில் பிரசாரங்களையும் மேற்கொண்டிருந்தனர். இதேவேளை புலம்பெயர் அமைப்புக்களும் மொகான் பீரிஸுக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுத்திருந்தன. இந்த நிலையிலேயே மொகான் பீரிஸ் இரகசிய வாக்கெடுப்பில் தோல்வியடைந்திருக்கின்றார்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இலங்கையின் நீதித்துறையில் உயர்பதவியிலிருந்தவர்கள் சர்வதேச நிறுவனங்களின் உயர் பதவிகளை பெறுவதில் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஏற்கனவே, பல இராணுவ அதிகாரிகளுக்கு மேற்குலக நாடுகள் வீசா வழங்குவதை நிறுத்தியிருக்கின்றன. இலங்கைக்குள் என்னதான் கம்பீரமாக இருந்தாலும், இலங்கைக்கு வெளியில் மதிப்புடன் இருக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இலங்கையின் பிரதம நீதியரசராக இருந்த ஒருவர், ஐ. நாவின் சர்வதேச சட்ட ஆணையத்தில், தகுதியற்றவராக நிராகரிக்கப்பட்டிருப்பதானது, அரசாங்கத்திற்கு ஒரு தெளிவான செய்தியை சுட்டிக்காட்டியிருக்கின்றது. சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக செயல்படாது விட்டால், அதற்கான பதிலை சர்வதேசத்தில் எதிர்கொள்வீர்கள். ஏனெனில், சர்வதேச அரங்குகள் என்பவை வீராவேச பேச்சுகளால் வாக்குகள் பெறும் இடமல்ல.

இதேவேளை, பிறிதொரு சவாலும் கொழும்பை துரத்திக் கொண்டிருக்கின்றது. ஏனைய நாடுகளை சேர்ந்தவர்கள் ஐ. நாவின் உயர் பதவிகளுக்கு போட்டியிடும்போது, அவர்களுக்கு எதிராக எந்தவொரு பிரசாரங்களும் இடம்பெறுவதில்லை. ஆனால், இலங்கையை சேர்ந்தவர்கள் இவ்வாறான பதவி நிலைகளுக்கு போட்டியிடும்போது, அதற்கு எதிராக பாரியளவில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஈழத் தமிழ் புலம்பெயர் சமூகத்தின் வலையமைப்புக்களே இதற்கான காரணமாகும். தமிழ் புலம்பெயர் சமூகம் மேற்குலக நாடுகளில் பலமான நிலையில் பிரசாரங்களை மேற்கொள்ளக்கூடிய தகுதியை கொண்டிருக்கின்றன. மேற்குலக மனித உரிமை அமைப்புக்களை நேரடியாக தொடர்புகொண்டு செயல்படக் கூடிய நிலையிருக்கின்றது. மேற்குலக இராஜதந்திரிகளை நேரடியாக சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபடுகின்றன.

இதன் காரணமாகவே ரணில் - மைத்திரி அரசாங்கம் மேற்குலக நாடுகளில் பலமான நிலையில் இயங்கக்கூடிய புலம்பெயர் அமைப்புக்களுடன் உரையாடலில் இருந்தது. அந்த அமைப்புக்களின்மீதான தடைகளை நீக்கியது. இதனால் புலம்பெயர் அமைப்புக்களும் கொழும்புடன் ஏதோவொரு வகையில் தொடர்புகளை பேண விரும்பின.

# மாமன்னர் ராஜராஜ சோழனின் 1,036 ஆவது சதய விழா!

- அனந்த பாலகிட்ணர் -

*இந்தியாவின் கீர்த்திமிக்க மன்னர்களில் ஒருவரான ராஜராஜ சோழனின் 1036ஆவது சதய விழா , அந்த மாமன்னன் நிர்மாணித்த உலகப் புகழ் பெற்ற தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயமுன்றலில் நேற்று முன்தினம் நினைவு கூரப்பட்டிருந்தது.*

*சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்கள் உட்பட பல்லவ மற்றும் நாயக்க மன்னர்களாலும் தமிழகம் ஆளப்பட்டிருந்தது. இந்த மன்னர்களின் ஆட்சிகளில் தமிழர்களின் மேன்மையை உலகளாவிய ரீதியில் இன்றுவரை மிக உயர்வாக மதிக்க வைப்பதாக அமைந்ததே சோழரின் ஆட்சி என்பது குறிப்பிடத்தக்கது.*

*சோழ மன்னர்களில் மிகச்சிறப்புற்றவராக விளங்கியவரே ராஜராஜ சோழன் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழர்களுக்கு மாத்திரமல்ல. சோழர்கள் சைவ சமயத்தவர்களாக இருந்தமையால் அவர்களின் காலத்தில் தமிழும் சைவமும் மிக நல்ல முறையில் மேம்பட்டிருந்தன.*

*சோழ மன்னர்களில் மகோன்னதமான மன்னராக மதிக்கப்படுபவரே ராஜராஜ சோழன். கி. பி. 1000 முதல் கி. பி. 1150 ஆண்டுவரை தென்னிந்தியா முழுவதுமே அவரின் ஆட்சி வியாபித்திருந்தது. தமிழே சோழர்களின் ஆட்சியில் உத்தியோகபூர்வ மொழியாக இருந்தது. ராஜராஜ சோழனின் ஆட்சியிலேயே சோழ சாம்ராச்சியம் என்றழைக்கப்படுமளவுக்கு கன்னடா (கர்நாடா), தெலுங்கு மற்றும் கேரள பிரதேசங்கள் மட்டுமல்ல. தெற்கே இலங்கை வரை சோழ சாம்ராச்சியம் வியாபித்திருந்தது.*

*ராஜராஜ சோழனின் ஆட்சியில் சைவ ஆலயங்கள் நிறையவே கட்டப்பட்டன. அத்துடன், அந்த ஆலயங்கள் வெறுமனே வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாது கலாசார மற்றும் பல்வேறு நிகழ்வுகளுக்குமுரிய இடங்களாகவும் விளங்கியிருந்தன. ராஜராஜ சோழனின் மகத்துவத்துவத்தையும் அந்த மகத்துவத்தின் மூலம் தமிழரின் திராவிட கட்டட கலையம்சத்தையும் வானுயர வெளிப்படுத்துவதாகவே தஞ்சாவூரில் அமைந்துள்ள பிரகதீஸ்வரர் ஆலயம் விளங்குகின்றது.*

*இன்றுவரை உலகின் முன்னணி கட்டடக் கலைஞர்களையே மூக்கில் விரலை வைத்து வியக்குமளவுக்கு தஞ்சாவூரில் ராஜராஜ சோழனால் சிவனுக்காக கட்டப்பட்ட பிரகதீஸ்வரர் ஆலயம் விளங்குகின்றது. தஞ்சாவூரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தஞ்சைப் பெருங்கோயில் என்றழைக்கப்படும் பிரகதீஸ்வரர் ஆலயம் திராவிட கட்டடக் கலையைப் பொறுத்தவரை மிக உயர்வாகவே மதிக்கப்படுகின்றது.*

*ராஜராஜ சோழனின் வாழ் நாளில் பெரும் பகுதி தஞ்சைப்பெருங்கோயிலை கட்டுவதிலேயே செலவிடப்பட்டிருந்தது. கி. பி. 1003ஆம் ஆண்டு தஞ்சைப் பெரிய கோயிலின் நிர்மாணத்தை ராஜராஜ சோழன் ஆரம்பித்தார். இதன்பின்னர் தமது ஆட்சின் 25ஆவது வருட பூர்த்தியின்போது தஞ்சைப் பெருங்கோயிலின் (பிரகதீஸ்வரர்) ஆலயத்தின் நெடிதுயர்ந்த விமானத்தின்மீது கோபுர கலசம் வைக்கப்பட்டிது.*

*சோழராட்சி தமிழகத்தில் செல்வ வளங்கொழிக்கும் ஆட்சியாக இருந்தமையால் இந்தியாவிலேயே தஞ்சைப் பெருங்கோயில் செல்வச்செழிப்பு மிக்க ஆலயமாக விளங்கியிருந்தது. தஞ்சாவூர் ஆலயத்துக்காக பல விஸ்தாரமான நெல் நிலங்கள் இருந்தன. அந்த நிலங்களிலிருந்து தஞ்சை ஆலயத்துக்கு தேவையான நெல் மற்றும் தானிய வகைகள் விநியோகிக்கப்பட்டு வந்தன.*

*ராஜராஜ சோழனின் காலத்தில் தஞ்சைப் பெருங்கோயிலை பராமரிப்பதற்கென பூசகர்கள் உட்பட 800 பேர் முழு நேர பணியாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். தஞ்சைப் பெருங் கோயில் பணியாளர்களுக்கு அவர்களின் வாழ்வாதாராமாக நிலபுலன்கள் வழங்கப்பட்டன. வீடுகள், பணம் மற்றும் பெறுமதியான பொருட்களும் கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன.*


*பிரகதீஸ்வரர் ஆலயம் என்றழைக்கப்பட்ட தஞ்சைப்பெரியவர் கோயில் கட்டப்பட்டுள்ள அமைவிடத்தை நோக்கும்போது கிழக்கிலிருந்து மேற்காக மொத்தம் 240.79 மீற்றர்கள் விரிவானதாக இருக்கின்றது. அத்துடன், வடக்கு-தெற்காக 121.92 மீற்றர்கள் பெருங்கோயில் உள்ளடக்கியதாக இருக்கின்றது.*

*பிரகதீஸ்வரர் ஆலயம் பதின் மூன்று தளங்களை கொண்டதாக இருக்கின்றது. அத்துடன் தஞ்சைப்பெரியவர் ஆலய கோபுரத்தின் உச்சியில் உள்ள கருங்கல்லால் செதுக்கப்பட்ட கலசம் 7.77 சதுரமானதாக இருக்கின்றது.*

*இந்த மிகப்பிரமாண்டமான கருங்கல்லாலான கலசம் எவ்வாறு 13 தளங்களைக் கொண்ட தஞ்சைப் பெருங்கோயில் உச்சத்துக்கு கொண்டு செல்லப்பட்டதென்பதுகூட பேரதிசயமாகவே இருக்கின்றது எனக் குறிப்பிடப்படுகின்றது. தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலய நிர்மாண வேலைகளில் எண்ணிலடங்காத வேலையாட்கள் ஈடுபடுத்தப்பட்டதோடு கணிசமானளவு யானைகளும் பாரந்தூக்கிகளாக பயன்படுத்தப்பட்டிருந்தன.*

*இந்நிலையில் மாமன்னர் ராஜ ராஜ சோழனின் 1036ஆவது சதய விழா தற்போது கொண்டாடப்படுவது தமிழ் இனத்தின் வரலாற்றுச்சிறப்பையும் எடுத்தியம்புவதாகவே இருக்கின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு






**மேடம்**
வாழ்க்கைத்துணைக்கு ஏற்பட்டிருந்த பிரச்னை தீரும்.புதிய விஷயங்களில் கவனமாக காலை எடுத்து வையுங்கள். வீடு பற்றிய கவலை ஒன்று சரியாகி நிம்மதி பிறக்கும்.

**இடபம்**
உற்சாகமான நாள். உறவினரை சந்தித்து மகிழ்வீர்கள். சகோதர, சகோதரிகளுடன் இருந்த சிறு பிரச்னை ஒன்று தீரும். இன்று யாரைப் பற்றியும் விமர்சனம் செய்யாமல் இருக்க வேண்டும்.

**மிதுனம்**
குழந்தைகள் பற்றிய மனஅழுத்தம் இன்றைக்கே சரியாகிவிடும். சிலருக்கு உஷ்ணம் சம்பந்தமான பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும். தந்தையின் உணவு விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

**கடகம்**
பொழுது போகும். பழுதான வாகனத்தைச் சீரமைப்பீர்கள். பிறரிடம் கனிவாகப் பேசுவீர்கள். ஆபரணம் சேரும். பணம் வரும். நீங்கள் யாருடன் மோதினாலும் அவர் பக்கம் நியாயம் இருக்கும்.

**சிம்மம்**
கவனமாக நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். கருத்து வேறுபாடு கொண்டவரிடம் மன்னிப்புக் கேட்பீர்கள். குழந்தைகளை அதிகம் கண்டிக்க வேண்டாம். வெற்றி வாய்ப்பு.

**கன்னி**
இன்று உணவு விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். உங்களை பற்றி யாரேனும் அதிகமாக பாராட்டினால் மயங்க வேண்டாம். நல்லவர், கெட்டவர் யாரென்று நட்புக் கொள்ளுங்கள்.

**துலாம்**
நல்ல காலம் வந்துவிட்டதற்கான அடையாளங்கள் தெரியும். ஆடை, ஆபரணங்களுக்காக அதிகமாக செலவு செய்வீர்கள். தாயாருக்கும் உங்களுக்கும் சண்டை வராமல் பார்த்து கொள்ளுங்கள்.

**விருட்சிகம்**
சுபநிகழ்ச்சி கூடிவரும். நன்மை கூடுதலாகும். எதிர்பாராத பணவரவு உண்டு. மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். ஓய்வு எடுக்க மனம் விரும்பினாலும் உழைக்க வேண்டி வரும்.

**தனுசு**
உறவினர் ஆதரவால் உங்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். தள்ளிப் போய்க்கொண்டிருந்த நல்ல விஷயம் இன்று உறுதியாகும். இளைஞர்களுக்கு உதவி செய்வீர்கள். சேமிப்பில் ஆர்வம் கூடும்.

**மகரம்**
கல்விக்காக செலவுகள் செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். தகுந்த நேரத்தில் செயல்பட்டு ஆரோக்யத்தை பாதுகாத்துக் கொள்வீர்கள். பெரியவர்களுக்கு உதவி செய்து வாழ்த்தைப் பெறுவீர்கள்.

**கும்பம்**
உங்களால் தந்தைக்கும் அவரால் உங்களுக்கும் நன்மை உண்டு. சிக்கலை ஊகித்து அதிலிருந்து முறையாக மீளுவீர்கள். வாக்கினிலே இனிமை கூடுவதால் பணி, தொழில் சிறக்கும்.

**மீனம்**
பரபரப்பான நாள். பயணம் தொடர்பாக இன்று செய்தி வரும். பணியிட ரகசியங்களை அவசரப்பட்டு யாரிடமும் பகிர வேண்டாம். சரியான தீர்மானங்களை முறையாக எடுத்து நிம்மதி அடைவீர்கள்.

# கொரோனா தொற்று நோய் கட்டுப்பாடு தமிழகத்தில் நவம்பர் 30 வரை நீடிப்பு

## முதலமைச்சர் ஸ்டாலின் நேற்று உத்தரவு

சென்னை, நவ. 15

தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்று கட்டுப்பாடுகளை நவம்பர் 30 ஆம் திகதி வரை நீட்டித்து முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக வடகிழக்கு பருவமழை காரணமாக பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. கன்னியாகுமரி உள்ளிட்ட சில மாவட்டங்களில் மேலும் சில நாட்களுக்கு மழை தொடர வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே பெய்த மழையின் காரணமாக பல இடங்களில் மழை நீர் தேங்கி நோய்த் தொற்று அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழகத்தில் தற்போது உள்ள கொரோனா நோய்த் தொற்று கட்டுப்பாடுகளை வரும் நவம்பர் 30 ஆம் திகதி வரை நீட்டித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். வடகிழக்கு பருவமழை, மழை, வெள்ள காலங்களில் டெங்கு போன்ற நோய்கள் பரவ வாய்ப்புள்ளதை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்படுவதாக அவர் தெரிவித் துள்ளார்.




கொரோனா நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த, பொது மக்கள் அவசியமின்றி வீட்டிலிருந்து வெளியில் வருவதையும், கூட்டம் கூடுவதையும் தவிர்க்க வேண்டும் என பொதுமக்களிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் பொது இடங்களில் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியினை கடைபிடிப்பது ஆகியவற்றை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

# முல்லை பெரியாறு அணை பிரச்னைக்கு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டுங்கள்

## தமிழக அரசை வலியுறுத்துகிறார் பன்னீர்செல்வம்

சென்னை, நவ. 15

தமிழ்நாட்டிற்கு எதிரான கேரள அரசின் நடவடிக்கையை உச்சநீதிமன்றத்தில் எடுத்துரைக்க வழிவகை செய்ய வேண்டும் என்றும், புதிய அணை கட்டுவது தொடர்பான எந்த பேச்சுக்கும் இடம் தரக்கூடாது என்றும் அ. தி. மு. க. ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர் செல்வம் கூறியுள்ளார்.



பன்னீர்செல்வம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

“முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்திக்கொள்ளவும், பேபி அணை மற்றும் சிற்றணை ஆகியவை பழுது பார்க்கப்பட்டு, பலப்படுத்தப்பட்ட பின் அணையின் நீர்மட்டத்தை 152 அடி வரை உயர்த்திக் கொள்ளவும், பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்வதற்கும் கேரள அரசு எந்தவித இடையூறும் அளிக்கக்கூடாது என்றும் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

கேரளாவுக்கு ஆதரவான மனநிலையில் ஆளும் கூட்டணியைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் இருப்பதாக பொது மக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் நினைக்கும் சூழ்நிலை தமிழ்நாட்டில் உருவாகி இருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கின்ற கட்சிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்.

ஆனால், தமிழ்நாட்டின் உரிமை என்று வரும்போது அதை எதிர்த்து குரல் கொடுக்க வேண்டிய கடமை தமிழ்நாட்டு மக்களின் வாக்குகளைப் பெற்று எம்.எல்.ஏ.க்களாக, எம்.பி.க்களாக, அமைச்சர்களாக இருக்கின்ற அனைவருக்கும் உண்டு. இந்த விஷயத்தில் மௌனம் சாதிப்பது என்பது தமிழ்நாட்டின் உரிமையை கேரளாவுக்கு அடகு வைத்ததற்கு சமம்.

இந்த பிரச்சனை குறித்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க ஏதுவாக அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்றும், தமிழ்நாட்டிற்கு எதிரான கேரள அரசின் நடவடிக்கையை உச்சநீதிமன்றத்தில் எடுத்துரைக்க வழிவகை செய்ய வேண்டும் என்றும், புதிய அணை கட்டுவது தொடர்பான எந்த பேச்சுக்கும் இடம் தரக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.”

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பாலியல் தொல்லை: மாணவி தற்கொலை தேடப்பட்ட பாடசாலை முதல்வர் கைது!

கோவை, நவ. 15

ஆசிரியரின் பாலியல் தொல்லையால் மாணவி தற்கொலை செய்துகொண்ட விவகாரத்தில் தேடப்பட்டுவந்த பாடசாலை முதல்வர் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கோவையை சேர்ந்த 17 வயது மாணவி ஒருவர் ஆர்.எஸ். புரம் பகுதியில் உள்ள சின்மயா வித்யாலயாவில் படித்து வந்தார். அங்கு ஆசிரியராக பணியாற்றிவந்த மிதுன் சக்ரவர்த்தி (வயது 31), அந்த மாணவிக்கு பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்து வந்தாரென கூறப்படுகிறது.

இதனால் அந்த பள்ளியில் தொடர்ந்து படிக்க தனக்கு விருப்பமில்லை. வேறு பள்ளியில் சேர்த்து விடுமாறு தனது பெற்றோரிடம் மாணவி கூறி உள்ளார். இதையடுத்து அவரை பெற்றோர் அதே பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளியில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு சேர்த்தனர். ஆனாலும் ஆசிரியர் தனக்கு பாலியல் தொல்லை கொடுத்ததால் மிகுந்த மனஉளைச்சலில் இருந்து வந்தார். இந்த நிலையில் கடந்த 11 ஆம் திகதி வீட்டில் தனியாக இருந்த மாணவி தற்கொலை செய்து கொண்டார்.

இதையடுத்து மாணவியின் தற்கொலைக்கு காரணமான ஆசிரியர் மிதுன் சக்ரவர்த்தியை தற்கொலைக்கு தூண்டுதல், போக்சோ உள்ளிட்ட சட்டத்தின் கீழ் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இந்த சூழலில், தனக்கு நேர்ந்த கொடுமை குறித்து புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கை எடுக்காததால் மாணவி தற்கொலை வழக்கில் பள்ளி முதல்வர் மீரா ஜாக்சன் பெயர் சேர்க்கப்பட்டது. இதனையடுத்து மீரா ஜாக்சன் தலைமறைவானார். அவரை பிடிக்க 2 தனிப்படை அமைக்கப்பட்டிருந்தது. தேடப்பட்ட மீரா ஜாக்சன் பெங்களூரில் நேற்று கைதானார். தற்போது பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இது தோல்வியடைந்த பட்ஜெட்!

## முருத்தெட்டுவே ஆனந்த தேரரும் விசனம்

கொழும்பு, நவ 15



தாம் எப்போதும் மக்களுக்காக நிற்பதாகவும் பதவிகளில் வாயை மூடிக்கொண்டு இருக்க முடியாது எனவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டம் தோல்வியடைந்த வரவு-செலவுத் திட்டம் எனவும் இதனால் மக்களுக்கு எதனையும் பெற்றுக் கொடுக்கவில்லை என ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் சுட்டிக்காட்டினார்.

வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் சகல அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பொருட்களைப் பெற மக்கள் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் நினைவுபடுத்தினார்.

தற்போதைய ஆட்சியின் கீழ் நாடு மீண்டும் சிறிமாவோ காலத்தின் வரிசை யுகத்துக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளதாகவும், இரண்டு வருடங்களுக்கு முன்னரே மக்கள் அரசாங்கத்தால் சலிப்படைந்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 15

களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் பாலிந்த நுவர ,மத்துகம, தொடாங்கொட, அகலவத்த, புலத்சிங்கள ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், கண்டி மாவட்டத்தில் உடபலாத்த, பஸ்பாகே கோரள, ஹரிஸ்பத்துவ, உடுநுவர, தொலுவ, கங்கா இஹல கோரள, யடிநுவர, கங்காவத்த கோரள ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட, அரநாயக்க, ரம்புக்கன, ருவான்வெல்ல, தெரணியகல, கலிகமுவ, மாவனெல்லை, யட்டியாந்தோட்டை, புளத்கோபிட்டிய, கேகாலை, வரக்காபொல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் அலவ்வ, ரிதிகம, பொல்கஹாவெல, நாராம்மலை, மாவத்தகம, மல்லாவபிட்டிய அகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் , மாத்தளை மாவட்டத்தில் ரத்தொட்ட, உக்வெல, ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ, கொத்மலை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், இரத்தினபுரி மாவடத்தில் நிவிதிகல, குருவிட, எலபாத்த, சிரியெல்ல,இரத்தினபுரி, கலவானை, எஹலியகொட, அயங்கம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்கும் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

இந்த மண்சரிவு எச்சரிக்கை இன்று மாலை 4.00 மணிவரை அமுலில் இருக்குமெனவும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது. (அ)

# மழையால் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு இரசாயன உரங்கள் வழங்க நடவடிக்கை

கொழும்பு, நவ. 15

**சில மாவட்டங்களில் பெய்த மழையினால் விவசாயிகள் முன்பு பயன்படுத்திய கரிம உரங்கள் அனைத்தும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், விவசாயிகளுக்கு வழங்குவதற்காக இருப்பில் உள்ள இரசாயன உரங்களை விவசாய அமைச்சுபெற்றுக் கொள்ளவுள்ளது.**

அண்மைய நாட்களில் பெய்த மழையால் நுவரெலியா, பதுளை மற்றும் பண்டாரவளை மாவட்டங்களில் மரக்கறி மற்றும் பழ உற்பத்தியாளர்கள் பயன்படுத்திய கரிம உரங்கள் அடித்துச் செல்லப் பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், இந்த மாவட்டங்களில் நெல் விதைப்பில் ஏற்பட்டுள்ள சேதத்தை அதிகாரிகள் இன்னும் மதிப்பிடவில்லை.

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, குறிப்பாக மரக்கறி விவசாயிகளின் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

நாங்கள் அவசர நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றால், காய்கறி விலைகள் கடுமையாக உயர்வதைக் காணலாம் என்று அவர் கூறினார்.

இந்த நிலைமை குறித்து விவசாயப் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடியதாக அமைச்சர் கூறினார்.

அவசர நடவடிக்கையாக, உர இறக்குமதியாளர்களின் சேமிப்பு கிடங்கிலிருந்து பூஞ்சைக் கொல்லி மற்றும் இரசாயன உர இருப்புகளை வைத்து பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அவற்றை பெறுவதற்கு ஏற்பாடு செய்ய பீடைகொல்லிப் பதிவாளருக்கு உத்தரவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நெல் விவசாயிகளின் பயிர்கள் சேதம் அடைந்திருந்தால் அவர்களுக்கு இழப்பீடு வழங்குமாறு விவசாய காப்புறுதிச் சபைக்கு அறிவித்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

இதேவேளை, நாட்டின் உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் எவ்வாறு செயல்படுவது என்பது தொடர்பான செயல்திட்டத்தை தன்னிடம் முன்வைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய அதிகாரிகளிடம் கேட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சின் செயலாளர் உதித் கே ஜயசிங்க தெரிவித்தார்.

மழையினால் வடமாகாணத்தில் நெற்செய்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் பின்னணியில் இந்த கோரிக்கை வந்துள்ளது.

இத்திட்டம் நாளை செவ்வாய்க்கிழமைக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக விவசாய அமைச்சின் செயலாளர் கூறினார். (அ)

# டொலர் பிரச்னைக்கு இதுதான் காரணம்!

## விளக்குகிறார் சம்பிக்க

கொழும்பு, நவ 15

2005ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் அதிக வட்டிக்கு கடனைப் பெற்று, அதனை எந்த வித வருமானமும் கிடைக்காத இடங்களில் அபி விருத்திப் பணிக்காக ஈடுபடுத்தப்பட்டமையே, இன்றைய டொலர் பிரச்னைக்கான காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டொலர் பிரச்னைக்கு, 2022ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டத்தில் எந்தவித தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கூட முடியாத அளவுக்கு டொலர் பிரச்னை பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

உரம், கிருமி நாசி ஆகியவற்றுக்கான இறக்குமதி தடை மற்றும் மழையுடனான சீரற்ற வானிலை காரணமாக இன்று மரக்கறி விலைகள் வானம் அளவுக்கு உயர்வடைந்துள்ளது.

இவ்வாறு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை பொதுமக்களால் பொறுத்துக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால், மக்களின் வர்த்தக நடவடிக்கைகள் வீழ்ச்சி அடைந்துள்ள பின்னணியில், அவர்கள் கொள்ளையடிக்கும் நிலைக்கும், தற்கொலை செய்துக்கொள்ளும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் தமிழ்-சிங்கள சித்திரை புத்தாண்டு தினத்தில் பாற்சோறு உட்கொள்வதற்கு முடியாத ஒரு வருட பிறப்பாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் பழைய தலைவர்களுக்கு இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என்பதனை ஜனாதிபதி உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். நாட்டை புதிய தலைமுறைக்கு கையளிக்க வேண்டும்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலுள்ள அங்கத்துவ கட்சிகளுக்கு மாத்திரமன்றி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களுக்கு கூட இன்று தமது பிரதேசத்திற்கு செல்ல முடியாத நிலைமை எழுந்துள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள பிரச்னையை அனைத்து மக்களும் எதிர்நோக்கியுள்ளமை மற்றும் விவசாயிகளுக்கு உரம் கிடைக்காத பிரச்னை ஆகியவற்றினாலேயே இவர்களுக்கு தமது பிரதேசத்துக்கு கூட செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான பிரச்னைகளை மறைப்பதற்காக தனிமைப்படுத்தல் சட்டம், இரகசியப் பொலிஸாரை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை தவறாக கையாளுதல் போன்ற செயல்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது-என்றார். (அ)



# சாந்தபுரம் கிராமத்தில் குருதிக்கொடை முகாம்

கிளிநொச்சி, நவ. 15

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் தெரிவான பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் உயர்தர மாணவர்களால் குருதிக் கொடை ஏற்பாடு செய்யப் பட்டது.

இந்த நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்றது. இந்த குருதி வழங்கும் நிகழ்வில் பிரதேசத்தை சேர்ந்த இளைஞர், யுவதிகள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டு குருதிக் கொடை செய்தனர். (அ)

# மூன்று பிரதான பரீட்சைகளின் வினாத்தாள் அமைப்பில் மாற்றம்

கொழும்பு, நவ. 15

புலமைப்பரிசில் பரீட்சை, கல்வி பொது தராதர சாதரான தரப் பரீட்சை, கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை என்பவற்றுக்கான பரீட்சை வினாத்தாள்களை அமைக்கும் நடவடிக்கைகளில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் எனக்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றின் காரணமாக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டுள்ள தடைகளை கருத்தில் கொண்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எல்.எம்.டீ. தர்மதாச தெரிவித்துள்ளார்.

இது தொர்பான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

# சந்தையில் தொடரும் எரிவாயு தட்டுப்பாடு!

கொழும்பு, நவ. 15

சந்தையில் மீண்டும் எரிவாயு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லாப்ஸ் எரிவாயு விநியோகம் பாரியளவு தாமதமடைந்துள்ளதாக நுகர்வோர் குறிப்பிடுகின்றனர்.

சில இடங்களில் லிட்ரோ எரிவாயுவுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

எரிவாயுவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக எரிவாயுவுக்கான கேள்வி அதிகரித்துள்ளதாகவும் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்தார்.

(அ)



# வடக்கு மாகாணத்துக்கான ரயில் சேவைகள் நிறுத்தம்

கொழும்பு, நவ. 15

முதன்மை ரயில் பாதையிலான ரயில் போக்குவரத்து வியாங்கொடை வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கான அனைத்து ரயில் சேவைகளும் இன்று இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு - காங்கேசன்துறை இடையே இன்று திங்கட்கிழமை மூன்று ரயில் சேவைகள் இடம்பெறவிருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

விஜய ரஜதஹன மற்றும் மீரிகமை ரயில் நிலையங்களுக்கு இடையில், வெள்ளம் காரணமாக ரயில் பாதையில் தாழிறக்கம் ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

குறித்த ரயில் பாதையை சீர்செய்ய பராமரிப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, குறித்த பணி நிறைவடையும் வரை, முதன்மை பாதையிலான ரயில் சேவைகள், கொழும்பு கோட்டையிலிருந்து வியாங்கொடை ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே திணைக்கள பொறியியலாளர்கள் குழு சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டதைத் தொடர்ந்து குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# நடத்துநர் இல்லாமல் தனியார் பஸ்களை இயக்குவதில் கவனம் செலுத்தவேண்டும்

## கெமுனு விஜேரத்ன கூறுகின்றார்

கொழும்பு, நவ. 15

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நடத்துநர்கள் இல்லாத தனியார் பஸ்களை இயக்குவதில் கவனம் செலுத்தப்படும் என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் பஸ்களில் கிடைக்கும் வருமானத்தில் இரண்டு ஊழியர்களை பராமரிப்பது கடினம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, 'ஓம்னி' எனப்படும் முற்கொடுப்பனவு அட்டையை பொதுமக்களுக்கு அறிமுகம் செய்வது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியுடன் ஏற்கனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டார்.

"முற்கொடுப்பனவு அட்டை



பெற விரும்பாத பயணிகளுக்கு பஸ் சாரதியின் அருகில் பணம் வைப்பிலிடும் தனி இடம் அமைக்கப்படும்.

பல பஸ் உரிமையாளர்கள் நடத்துநர்கள் இன்றி பஸ்களை இயக்கி வருகின்றனர்.

எரிபொருள் விலை அதிகரிப்பு, ரயர் உள்ளிட்ட உதிரி பாகங்களின் விலை அதிகரிப்பு மற்றும் பஸ்களில் பயணிக்கும் பயணிகளின் பற்றாக்குறை காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது" என்றும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (அ)

# நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை

## உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, நவ. 15

இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லையென எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மீண்டும் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்படுமாயின் அது நிதியமைச்சின் ஊடாகவே முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும் கடந்த காலங்களிலும் விலை அதிகரிப்பு தொடர்பான விபரங்கள் மாத்திரமே தம்மால் வெளியிடப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# தமிழரின் நினைவுநாளை ஒரு மதத்தவர் முடிவு செய்வதை எப்படி அனுமதிக்கலாம்?

## கலாநிதி ஆறு.திருமுருகன் கேள்வி



யாழ்ப்பாணம், நவ. 15

**தமிழர்களின் நினைவுநாளை ஒரு மதத்தவர்கள் எவ்வாறு தீர்மானிக்க முடியும் என்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

ஓய்வுநிலை மாவட்ட செயலாளர் நாகலிங்கம் வேதநாயகனின் சேவை நயப்பு விழாவில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று அளவையூர் தத்து வஞானி கைலாசபதி அரங்கில் நேற்று முற்பகல் இந்த விழா இடம்பெற்றது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் மேலும் தெரிவித்ததாவது:

இந்து மக்களும் கிறிஸ்தவர்களும் மிகவும் ஒற்றுமையாக செயற்பட்டவர்கள். நாங்கள் படிக்கின்ற காலத்தில் கிறிஸ்தவ நண்பர்களோடு சேர்ந்து பழகி ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம். நான் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டபோது என்னை முதன்முதலில் நேரடியாக வந்து வாழ்த்தியவர் தற்போது யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயராக உள்ள ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையே. அவ்வாறு நாங்கள் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றோம்.

தற்போது ஒரு பிரச்சனை காணப்படுகின்றது. கிறிஸ்தவ மதத்தில் பல சபைகளை உருவாக்கி தமது மதத்துக்கு மதம் மாற்றும் செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள். வறிய நிலையிலுள்ள மக்களுக்கு பணத்தைக் கொடுத்து மதமாற்றம் செய்வதை முன்னெடுக்கிறார்கள். அது ஏற்கக்கூடிய ஒரு விடயமல்ல.

நாங்கள் இந்துக்கள் எப்போதாவது எமது மதத்திற்கு மதம் மாறவேண்டும் என்று எங்காவது கேட்டிருக்கின்றோமா? நாங்கள் கேட்கமாட்டோம்.

அதேபோலவே ஒட்டுமொத்த தமிழர்களின் திருநாளை ஏனைய மதத்தவர்களை புறந்தள்ளி விட்டு ஒரு மதத்தவர்கள் மாத்திரம் எவ்வாறு தீர்மானிக்க முடியும்? ஏனைய மதத்தவர்களோடு கலந்துரையாடாது ஒரு மதத்தவர்கள் மாத்திரம் எடுத்த முடிவினை ஏனையவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

80 வீதமாக உள்ள ஏனைய மதத்தவர்களை புறந்தள்ளி விட்டு ஒரு மதத்தவர்கள் மாத்திரம் தமிழர்களின் திருநாளினை தீர்மானிப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயம்.

இந்துக்கள் கிறிஸ்தவ மக்களுக்கோ, கிறிஸ்தவ துறவிகளுக்கோ எதிரானவர்களல்லர். நாங்கள் ஒற்றுமையாக செயல்பட்டு வருகின்றோம். இந்துக்களாகிய நாம் எந்த மதத்தவர்களோடும் சண்டை பிடிக்கப் போவதில்லை. ஆனால் நமக்கு ஒரு தாக்கம் ஏற்படும் போது அதனை பார்த்துக் கொண்டிருக்க முடியாதுதானே - என்றார். (அ-03)

# விவசாயிகளுக்கு துப்பாக்கி வழங்க தயாராகின்றது அரசு

கொழும்பு, நவ. 15

இரண்டு ஹெக்ரேயருக்கு அதிகமான விவசாய நிலமிருந்தால் விவசாயிகளுக்கு துப்பாக்கிக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர், ஐந்து ஹெக்ரேயர்- விவசாய நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மாத்திரமே துப்பாக்கிகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டதாக தெரிவித்த அவர், காட்டுப் பன்றி போன்று விலங்குகளினால் ஏற்படும் அழிவு அதிகரித்துள்ளதாக விவசாயிகளினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளை ஆராய்ந்த பின்னரே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

இவ்வாறு விலங்குகளினால் ஏற்படும் அழிவுகளினால் நாட்டில் மொத்த விவசாய உற்பத்திகளில் 40 வீதத்திலிருந்து 50 வீதம் வரை பாதிப்பு ஏற்படுவதாகவும் விவசாய அமைச்சர் மேலும் கூறினார்.



# வாகன இறக்குமதிக்கான சந்தை இப்போதைக்கு திறக்கப்படாது

## நிதி அமைச்சு கூறுகின்றது

கொழும்பு, நவ. 15

வெளிநாடுகளில் இருந்து வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான சந்தை விரைவில் திறக்கப்படாது என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த நிதியமைச்சின் செயலாளர், தற்போது வாகன இறக்குமதிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய தேவை இருப்பதாக தாம் கருதவில்லை என அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஆறு முதல் ஏழு மாதங்களுக்கு வாகன இறக்குமதிக்கான அனுமதி விரைவில் திறக்கப்படாது என்றும் அவர் கூறினார்.

கொரோனா பரவலின் தாக்கம் காரணமாக மார்ச் மாதம் முதல் வாகன இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், தற்போதைய சூழ்நிலையில் வாகனங்களை இறக்குமதி செய்வது குறித்து உடனடியாக எந்த முடிவும் எடுக்கப்பட மாட்டாது என்றும் கூறினார். (அ)

# கைப்பற்றிய போதைப்பொருள்களை விரைவாக அழிப்பதற்கு புதிய திட்டம்

கொழும்பு, நவ. 15

கைப்பற்றப்படும் போதைப்பொருள்களை விரைவாக அழிக்கும் நடவடிக்கை அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

"பரிசோதனையின் பின்னர் போதைப்பொருள் உடனடியாக நீதிவான் முன்னிலையில் ஒப்படைக்கப்படும். அவற்றில் சில மாதிரிகள் எடுத்து வைக்கப்படும். ஏனைய அனைத்து போதைப்பொருள்களும்



நீதிவான் முன்னிலையில் அழிக்கப்படும்.

நீதி அமைச்சும் சட்ட மா அதிபர் திணைக்களமும் இது தொடர்பான ஆரம்பகட்ட பணிகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளன" என்றும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார். (அ)

# நாட்டை கட்டியெழுப்புவதற்கு திட்டமிருந்தால் முன்வையுங்கள்

## எதிர்க்கட்சிக்கு ஜோன்ஸ்டன் சவால்

கொழும்பு, நவ. 15

தம்பட்டம் அடிக்காது நாட்டின் பிரச்னைகளை எப்படி தீர்க்கலாம் என்ற தீர்வை 24 மணி நேரத்தில் மக்களுக்கு முன்வைக்குமாறு நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ எதிர்க்கட்சிகளுக்கு சவால் விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று முழு உலகமும் நெருக்கடியில் உள்ளது. கொரோனா தொற்றுநோயால் நம் நாடு மட்டுமல்ல, உலகின் அனைத்து நாடுகளும் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளன. ஆனால், நமது அரசாங்கம் அந்த நெருக்கடியை நன்றாகவே கையாளுகிறது.

பொருட்களின் விலை குறைக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் கூறுவதை கண்டேன். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மட்டுமின்றி உலகின் அனைத்து நாடுகளிலும் பணவீக்கம் அதிகரித்துள்ளது. இந்த பணவீக்கம் அதிகரிப்பு நம்மை மட்டும் பாதிக்கவில்லை.

இன்று தொழில்நுட்பம் முன்னேறிவிட்டது. இணையத்தை கொஞ்சம் பயன்படுத்தி பாருங்கள். நம் நாட்டில் தான் பிரச்னைகள் இருப்பது போல் பொய்களை பரப்பாதீர்கள். நமது நாட்டில்தான் பணவீக்கம் அதிகம் என்று எதிர்க்கட்சிகள் காட்ட முயல்கின்றன.

கொரோனா தொற்றுநோயால் அனைத்து பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. உலகில் பொருட்களின் உற்பத்தி குறைந்துள்ளது. தொழில்துறை வலையமைப்புக்கள் உலகளவில் சரிந்துள்ளன. பலதரப்பு மற்றும் இருதரப்பு உதவிகள் குறைந்துள்ளன.

கொரோனா நெருக்கடியால் மற்ற நாடுகளுக்கு எல்லா நாடுகளாலும் உதவ வழி இல்லை. ஏனெனில் ஒவ்வொரு நாடும் அதன் உள்நாட்டுப் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும். எனவே உலகின் ஒவ்வொரு நாடும் இதுபோன்ற விஷயங்களால் செல்வந்த நாடுகளில் இருந்து கடன் மற்றும் உதவி பெறுவதில் சிக்கல் உள்ளது.

உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நாம் செல்ல வேண்டும். நாம் ஒவ்வொரு நாளும் யாரையும் சார்ந்து இருக்க முடியாது என்பதை இந்த கொரோனா தொற்றுநோயின் காரணமாக அனைவரும் உணர்ந்துள்ளனர். அபிவிருத்திச் செயல்பாடுகள் தொடர வேண்டியதும் அவசியமாகும். ஏனென்றால் இனியும் எமது நாட்டை பின்நோக்கிச் செல்ல இடமளிக்கமுடியாது.

வீதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தினால்தான் நாடு வளர்ச்சி அடையும். எதற்காக வீதிகள் அமைக்கப்படுகின்றன



என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வினவுகின்றனர். நாட்டை அபிவிருத்தி செய்யத்தான் வீதிகள் அமைக்கப்படுகின்றன. இவை எதிர்காலத்துக்கான முதலீடுகள். எதிர்க்கட்சி எம்.பிக்கள் எங்களிடம் கூட எங்களிடம் வீதிகள் நிர்மாணித்து தருமாறு கேட்கிறார்கள். அவர்களுக்கு வீதிகளின் மதிப்பு தெரியும். அவ்வாறு கேட்டவாறே வீதிகள் எதற்காக என்றும் வினவுகின்றனர்.

அத்துடன், இவ்வருட வரவு- செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் தலா 3 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆளும் தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு எம்பிக்களுக்கு ரூ. 5 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. எங்களுக்கு கட்சிகள் அன்றி மக்கள் சேவை தான் முக்கியம். சமுர்த்தித் திட்டம் கிராம அபிவிருத்தித் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

எம்.பிக்கள் ஓய்வூதியம் பெற 10 ஆண்டுகள் காத்திருக்கவேண்டும் என்று இந்த பட்ஜெட்டில் முன்மொழிந்துள்ளோம். பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் எரிபொருள் சலுகை குறைக்கப்பட்டுள்ளது. தொலைபேசி கட்டணம் 25 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. அரசு செலவினங்களை குறைக்க நாம் முன்னுதாரணமாக திகழ்கிறோம்.

உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நாம் செல்ல வேண்டும். கொரோனா தொற்றினால் அழிந்த பொருளாதாரத்தைச் சீர் செய்ய உலக நாடுகள் முயற்சிக்கின்றன. பொருட்களின் விலை உயர்வு தற்காலிகமானது. தேவைக்கு ஏற்ப விநியோகம் இல்லாத போது, பொருட்களின் விலை உயரும்,பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படும் .

மீண்டும் சந்தைக்கு பொருட்கள் வரும்போது, மீண்டும் விலை குறைகிறது. முழு உலகிலுமே நெருக்கடி ஏற்பட்டுள்ள சமயத்தில் எதிரணி தம்பட்டம் அடித்து வருகின்றது . தம்பட்டம் அடிக்கும் நிலையில் அவர்கள் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை தயாரித்திருப்பார்கள். அதனால் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்திருந்தால் அதனை மீட்டெடுப்பதற்கான வழியை மக்களுக்கு 24 மணி நேரத்தில் முன்வைக்குமாறு எதிர்க்கட்சியினருக்கு சவால் விடுகிறேன். எதிர்க்கட்சியிடம் எந்த திட்டமும் இல்லை என்பதுதான் உண்மையான விடயம்-என்றார்.

# வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர் புறக்கணிப்பு

## தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்க தீர்மானம்

**கொழும்பு, நவ. 15**

**2022ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்கள் புறக்கணிக்கப்பட்டமைக்கு எதிராக இலங்கை அரச உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க சம்மேளனம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.**

அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அதன் தேசிய அமைப்பாளர் வி. ஏ. பி. பஸ்நாயக்க தெரிவித்தார்.

அவ்வாறு செய்யாவிட்டால், அரச ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், அரசசேவை நாட்டுக்கு சுமையாக மாறியுள்ளதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார். (அ)

# இருண்டயுகம் நோக்கி பயணிக்கின்றது நாடு

கொழும்பு, நவ. 15

தடுப்பூசி செலுத்தப்பட்ட போதிலும் நாளுக்கு நாள் கொரோனா பாதிப்பு மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை சிறிதளவு அதிகரித்து வருவதால், நாடு இருண்ட காலகட்டத்தை நோக்கிச் செல்வதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் அன்வர் ஹம்தானி, அதிகளவான கொரோனா நோயாளிகள் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.

176 மொத்த சிகிச்சை மையங்களில் 30 சதவீதம் தற்போது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இது எச்சரிக்கை மணியை ஒலிக்க வைக்கிறதென்றும் நிலைமை மோசமடைவதற்கு முன்பு அதைக் கட்டுப்படுத்துவது கட்டாயமாகும். அவ்வாறு இல்லையெனில், சில மாதங்களுக்கு முன்பு இருந்த இருண்ட காலகட்டத்துக்கு நாடு செல்லும்- என்றார். (அ)



# துும்பளை கடற்கரையில் மரக்கன்றுகள் நடுகை!

வடமராட்சி, நவ. 15

பருத்தித்துறை தும்பளை கடற்கரையோரத்தில் வன பாதுகாப்பு திணைக்களத்தாலும் ஆர்வமுள்ள இளைஞர்களாலும் 50 புங்கன் மரக் கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது மரக் கன்றுகளின் பாதுகாப்புக்கு இயற்கையாகக் கிடைக்கும் பனைமர ஓலைகளை பயன்படுத்தி வேலியும் அமைக்கப்பட்டது.

தும்பளை கடற்கரை பொழுது போக்குக்காக அதிகளவில் மக்கள் கூடும் இடமாக உள்ளது. இதனால், நிழலுக்காகவும் அழகுக்காகவும் இந்த மரங்கள் நாட்டப்பட்டன என்று வன பாதுகாப்பு திணைக்களத்தினரும், ஆர்வலர்களான இளைஞர்களும் இதன்போது தெரிவித்தனர்.

(ஐ)

# 15 நாள்களுக்கு தேவையான எரிபொருள் கையிருப்பில்!

## 51 ஆண்டுகளின் பின் சப்புகஸ்கந்தையில் எண்ணெய் சுத்திகரிப்பு இடைநிறுத்தம்

கொழும்பு, நவ.15

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் இடைநிறுத்தப்பட்டபோதிலும் அடுத்த 15 நாள்களுக்கு நாட்டுக்கு தேவையான எரிபொருள் கிடைக்கும் என இலங்கை பெற்றோலிய சேமிப்பு டெர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மொஹமட் உவைஸ் தெரிவித்துள்ளார்.

முன்னர் கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்ட பல சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் தாங்கிகள் அடுத்த சில வாரங்களில் இலங்கைக்கு வரவுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் விநியோகம் எவ்வித தாமதமும் இன்றி மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்றும் பெற்றோலிய சேமிப்பு டெர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மொஹமட் உவைஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் அமைச்சர் மற்றும் அரசின் மோசமான நிர்வாகத்தினால் இன்று நிறுத்தப்படும் என தொழிற்சங்கவாதிகளான ஆனந்த பாலித குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மசகு எண்ணெய் பற்றாக்குறையால் 51 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக சுத்திகரிப்பு நிலையம் மூடப்படவுள்ளது. இது மிகவும் சோகமான சூழ்நிலையாகும்

ஆசியாவிலேயே மிகவும் பழமையான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இலங்கைக்கு சொந்தமானது என்றும், அது 1961ஆம் ஆண்டு தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது என்றும், அது ஆசியாவின் அழியாத சுடர் என்றும் அழைக்கப்பட்டது.

உலக சந்தையில் கச்சா எண்ணெய் மற்றும் சப்ளையர்களுக்கு பற்றாக்குறை இல்லை அல்லது நாட்டுக்கு தேவையான மசகு எண்ணெயை கொண்டு செல்வதற்கான கப்பல்களுக்கு பற்றாக்குறை இல்லை.

சுத்திகரிப்பு நிலையத்துக்கான அடுத்த இறக்குமதி டிசெம்பர் 23ஆம் திகதி நடைபெற உள்ளது. அப்போது நாடு இருளில் மூழ்கிவிடுவதால் கடுமையான எரிபொருள் நெருக்கடி உருவாகும் - என்றார்.

(அ)

## அமெரிக்காவுடன் பேச்சு:

# தமிழ் அரசா? கூட்டமைப்பா? சுமந்திரன் சட்டக்குழுவா?


கனக ஈஸ்வரன்

**பனங்காட்டான்**

இலங்கைத் தமிழர் அரசியல் தீர்வுக்கென 1956லிருந்து 1987 வரையான காலப்பகுதியில் நான்கு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பண்டா-செல்வா ஒப்பந்தம் முதலாவது. பௌத்த பிக்குகள் பயமுறுத்தலாலும், ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பாதயாத்திரையாலும் இந்த ஒப்பந்தத்தை பண்டாரநாயக்க ஒருதலைப் பட்சமாக கிழித்தெறிந்தார்.

இரண்டாவது ஒப்பந்தம் டட்லி - செல்வா எனப்படுவது. தனது ஆட்சியை ஐந்து ஆண்டுகளுக்குத் தக்கவைக்க டட்லி சேனநாயக்க செய்த ஒப்பந்தம் நீர்மேல் எழுத்தானது.

மூன்றாவது ஒப்பந்தம் தமிழீழ விடுதலைப் புலிகள் வே. பிரபாகரனுக்கும், அப்போது பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையிலானது. ஆறு சுற்றுப் பேச்சுகளின் பின்னர் சந்திரிகாவின் ஆட்சியில் இது படுகொலைக்குள்ளானது.

1987ல் ஜே.ஆரும் ராஜீவும் செய்துகொண்ட இலங்கை இந்திய இருநாட்டு ஒப்பந்தம், இலங்கை அரசியலமைப்பில் ஓர் அங்கமாக்கப்பட்டு பதின்மூன்றாவது திருத்தம் என்ற பெயரில் இன்றும் ஏட்டுச் சுரைக்காயாகவுள்ளது.

பதின்மூன்றாவது திருத்தத்தை மையப்படுத்தியே இலங்கைக்குள் இந்தியா தனது கால்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது. ஆனால், அதனால் ஏனோ காய்களை நேர்த்தியாக முன்னெடுக்க முடியவில்லை.

விடுதலைப் புலிகளை ஏமாற்ற முனைந்து தோல்வி கண்டதால் ஈழ விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதில் முன்னின்று இயங்கிய இந்தியா, பேருந்தை ஓடவிட்ட பின்னர் துரத்துவது போன்று


நிர்மலா சந்திரஹாசன்

இப்போது பல வழிகளாலும் அதனை எட்டிப் பிடிக்க விரும்பி அசைகிறது.

கடந்த சில மாதங்களாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரும், இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பயணிக்கும் உயர் அதிகாரிகளும் கூட்டமைப்பினரையும், தனித்துச் சம்பந்தனையும் சந்தித்து வருகின்றனர். இந்தியாவுக்குச் செல்வதற்கான அழைப்பை எதிர்பார்த்துள்ளோமென சம்பந்தன் பல தடவை கூறி வந்தாராயினும், அதற்கான அழைப்பு இலவு காத்த கிளியின் கதைதான். அதற்குப் பதிலாக சம்பந்தனுக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளதாக (?) செய்திகள் வெளிவந்தன.

இதிலும்கூட இரண்டு வேறுபட்ட தகவல்கள் உண்டு. கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவரிடம் சம்பந்தன் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில்தான் அழைப்பு வந்ததாக ஒரு தகவல். ஆனால், கூட்டமைப்பு அழையா விருந்தாளியாகச் செல்கிறதென பங்காளித் தோழரான ரெலோ சொல்கிறது.

இதற்கும் அப்பால் அமெரிக்கா


சுமந்திரன்

செல்வதற்கு சம்பந்தன் தெரிவு செய்த மூவர் குழு பற்றி அரசியல் அரங்கிலும் உள்வீட்டிலும் பல வாதங்கள் இடம்பெறுகின்றன. தமக்கான அழைப்பை முதுமை காரணமாக பயணிக்க முடியாத நிலையில் தமது லெப்ரினன்டான சுமந்திரனை அவர் நியமித்ததாக சுமந்திரனே ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தினார். இதன் பின்னரே அமெரிக்க பயணம் பற்றிய விபரங்கள் வெளிவர ஆரம்பித்தது. அமெரிக்காவுக்கான தமிழர் தரப்புக் குழுவில் இடம்பெறும் மற்றிருவரான பிரபல சட்டவாளர்கள் கனக. ஈஸ்வரன், நிர்மலா சந்திரஹாசன் ஆகியோரின் பெயர்களையும் சுமந்திரனே அறிவித்தார்.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் வலது கரமாகத் திகழ்ந்த முன்னாள் செனட்டரான பிரபல வழக்கறிஞர் எஸ். ஆர். கனகநாயகத்தின் புதல்வர் கனக. ஈஸ்வரன். நீண்டகாலமாக ஈழ அரசியலில் முன்னரங்கிலும் பின்னரங்கிலும் பங்காற்றி வருபவர் இவர்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்டபோது அதன் செயலாளராகவும், செனட்டராகவுமிருந்து பின்னர் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராகவும் நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவுமிருந்த டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனின் புதல்வி நிர்மலா சந்திரஹாசன். இவரது கணவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் புதல்வர்.

மூவருமே திறமையான சட்டவாளர்கள். ஈழ அரசியலில் நன்கு அறியப்பட்டவர்கள். கனக. ஈஸ்வரனும் நிர்மலா சந்திரஹாசனும் நீண்ட அரசியல் பாரம்பரிய குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். ஆனால், இக்குழுவுக்குத் தலைமை தாங்கும் சுமந்திரன் அவ்வாறான பின்னணியைக் கொண்டவரல்ல. அரசியல் அனுபவஸ்தருமல்ல. எனினும், ஒரு தசாப்த கால வித்தியாச அரசியல் அனுபவம் இப்போது இவருக்குண்டு.

ஈழத்தமிழரின் அரசியல் அபிலாசைகள் குறித்தும், கோட்டாபய அரசு புதிதாக கொண்டு வரப்போவதாகக் கூறப்படும் புதிய அரசியலமைப்பில் எவ்வாறு இவ்விடயங்களை கையாள வேண்டுமென்பது குறித்தும் கலந்துரையாடவே இக்குழு அமெரிக்கா செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழரின் அரசியல் அபிலாசைகள், தொடர்ச்சியான பேச்சுகள், ஏமாற்றங்கள் என்பவை அமெரிக்காவுக்குத் தெரியாதவையல்ல. ஒருவகையில் சொல்லப் போனால் அமெரிக்கா இவ்விடயத்தில் ஒருபோதும் பார்வையாளராக இருக்கவில்லை. சுமந்திரனை விட அமெரிக்காவுக்கு இலங்கைத் தமிழர் விவகாரம் நன்கு பரிச்சயமானது.

இந்திய - அமெரிக்க நட்புறவு ஏற்பட்ட பின்னர் ஈழ அரசியலின் ஒவ்வொரு நகர்வும் உள்ளும் புறமுமாக இவர்களால் கையாளப்பட்டது. கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் இது தொடர்பாக நாளாந்தம் வாஷிங்டனுக்கு அனுப்பிய அறிக்கைகளை விக்கிலீக்ஸ் பகிரங்கமாக்கியதை அனைவரும் அறிவர். நோர்வே தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தமது வகிபாகத்தின் பெறுபேறுகளை உடனுக்குடன் அமெரிக்காவுக்கு ராஜரீக வழியாக தெரியப்படுத்தியே வந்தார். அமெரிக்காவின் சமாதான முகமாக நோர்வே இயங்கியதென்பதைத் தெரிந்துகொண்டால் விடயங்களைப் புரிந்துகொள்ளலாம். எரிக் சொல்ஹெய்ம் தமது ஒவ்வொரு இலங்கை விஜயத்தின் பின்னரும் புதுடில்லிக்கூடாகவே நாடு திரும்பியதும் கவனிக்கப்பட வேண்டியது.

தமிழர் தரப்பு எவ்வாறு செயற்பட வேண்டுமென்று அண்மையில் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்த கருத்தும் இந்தியாவின் கூட்டமைப்பினருடான தொடர் சந்திப்புகளும், அமெரிக்காவுக்கு தமிழர் குழு விஜயம் மேற்கொள்வதும் ஒன்றோடொன்று கூட்டிப் பார்க்க வேண்டியவை.

கூட்டமைப்பின் சார்பில் மூன்று சட்ட நிபுணர்கள் குழு அமெரிக்கா செல்வதை எவரும் எதிர்க்கப்போவதில்லை. இதற்கு நியாயமான காரணங்கள் உண்டு. ஆனால், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்குத் தெரியாமலே சம்பந்தன் இவ்விடயத்தைக் கையாள்வது முறையானதாகத் தெரியவில்லை. பங்காளிக் கட்சிகள் மட்டுமன்றி தமிழரசுக் கட்சியினருக்குள்ளும் இது விடயத்தில் கருத்து வேறுபாடுண்டு.

ரெலோவின் முன்னெடுப்பில் புளொட்டின் அனுசரணையோடு இன்னொரு கூட்டு ஏற்படுத்தப்பட்டு பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த அண்மையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது, இதன் எதிர்வினையாகவே அமெரிக்க விஜய குழுவை சம்பந்தன் தம்மிஷ்டப்படி தெரிவு செய்ததாக பங்காளிகளுக்குள் பேசப்படுகிறது.

தமிழ் அரசின் மூத்த பிரமுகரும், வடமாகாண சபையின் அங்கத்தவராகவுமிருந்த ஒருவர் இது தொடர்பாக இப்பத்தியாளரிடம் உரையாடுகையில் தெரிவித்த கருத்து பின்வருமாறு: - 2009 முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர் கொழும்புவாசி ஒருவரின் பெயரை சிங்கள் அரசியல் கட்சியொன்றின் தேசியப் பட்டியலில் சேர்க்குமாறு வெளிநாடொன்று வேண்டியது. அதிலுள்ள இடக்குமுடக்கான நிலையைக் கருதி அக்கட்சியின் தலைவர் குறிப்பிட்ட கொழும்புவாசியை கூட்டமைப்புத் தலைமையிடம் கையளித்தார். அவரே இப்போதைய செயல்பாடுகளின் மையப்புள்ளி - இவ்வாறு அவர் கூறினார்.

நல்லாட்சி அரசுக்கு கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியது. அந்த அரசின் பிரதமரை ஜனாதிபதியாக இருந்த மைத்திரி பதவி நீக்கியபோது, அதற்காக நீதிமன்றப் படியேறிய கூட்டமைப்பு அவரை மீண்டும் பிரதமராக்கியது, புதிய அரசியலமைப்பு வருவது நிச்சயமென்று நம்பிய அனைத்துக்குமே இறக்குமதிப் பிரமுகரே காரணமென்பது என்பது தமிழ் அரசுப் பிரமுகரின் கருத்துக் கூடாக தெரிய வந்த விடயம்.

இப்போது இடம்பெறும் அமெரிக்க விஜயம் எதிர்பார்க்கப்படும் ஏதாவது ஒரு மாற்றத்தை ஏற்படுத்துமென நம்பலாமா? இவ்வாறு கேள்வி எழுப்புவதற்கு சில நியாயப்பாடுகள் உண்டு.

அமெரிக்காவுக்கான மூவர் குழுவுக்கு வெவ்வேறு பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. குழுவுக்குத் தலைமை தாங்கும் சுமந்திரன் இக்குழுவை கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவென்று கூறியுள்ளார். சுமந்திரனைத் தவிர மற்ற இருவரும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அல்லாததால் இவ்வாறு அழைப்பது சரியா என்று கேட்கப்படுகிறது.

இக்குழு தொடர்பாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் வரவேற்பைத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவுடன் பேசுவதற்கு தமிழ் அரசுக் கட்சி பிரமுகர்கள் செல்வதில் எந்தத் தவறுமில்லை என்று குறிப்பிட்டுள்ளதனூடாக இதனை தமிழ் அரசுக் குழுவென்று இவர் அடையாளமிட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று இக்குழுவை சுமந்திரன் குழுவென்று தலைப்பிட்டுள்ளது. இக்குழு அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பிய பின்னரும் இந்தப் பெயர் பிரச்னை நீளும்போல் தெரிகிறது.

இதற்கிடையில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரை இந்த வாரம் சந்தித்த கூட்டமைப்பினர், தற்போதைய அரசின் கீழான புதிய அரசியலமைப்பு தமிழருக்குச் சாதகமாக இருக்காதென்று சுட்டிக் காட்டியுள்ளது. ஆனால், இந்த அரசியலமைப்பின் கீழ் தமிழர் அரசியல் அபிலாசைகளை எவ்வாறு உள்ளடக்குவது என்பது பற்றிப் பேசவே மூவர் குழு அமெரிக்கா செல்வது விந்தையாக இருக்கிறது.

இதனை தெளிவுபடுத்துவதாக விக்னேஸ்வரன் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கும் பின்வரும் விடயம் ஆழ்ந்த கவனத்துக்குரியது:

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பான நிலைப்பாடுகளை இவர்கள் (மூவர் குழு) செல்லும் இடங்களில் தெளிவுறுத்தும் வரையில் தனது ஆதரவு இவர்களுக்கு இருக்குமென்று கோடு கீறியுள்ளதோடு, ஆட்சி மாற்றங்களுக்கான கருவிகளாக தமிழ் மக்கள் பயன்படுத்தப்படுவதற்கு இடமளிக்காமல் இவர்கள் செயற்பட வேண்டுமென்பது தமது எதிர்பார்ப்பு என்று முன்னெச்சரிக்கை செய்துள்ளார்.

சுமந்திரனுடன் செல்லும் சட்ட நிபுணர்கள் இருவரும் விக்னேஸ்வரனின் கருத்தை உள்வாங்கி கூர்மையாகவும், உன்னிப்பாகவும் செயற்பட வேண்டும். ■

# வருமானம் இழந்தோருக்கு உதவி!

**2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நிகழ்த்திய உரை. நேற்று வெளிவந்ததன் தொடர்ச்சி**

## அதிகரித்துள்ள ஏற்றுமதி

எமது ஏற்றுமதிகள் 2021 ஒக்டோபர் அளவில் ஐ.அ.டொலர் 10,028 மில்லியனாக அதிகரித்தமை ஊக்கமளிக்கின்றது. முழு வருடத்திற்கும் ஐ.அ.டொலர் 11,900 மில்லியன் கொண்ட இலக்கினை நான் நிர்ணயித்துள்ளேன். அதேபோன்று அதேகாலப்பகுதிக்கான இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 16,588 மில்லியனாகும். இவ்வாண்டுக்காக சுமார் ஐ.அ.டொலர் 18,900 மில்லியன் கொண்ட செலவிடும் இலக்கொன்றினையும் நான் நிர்ணயித்துள்ளேன். எனவே, வர்த்தகப் பற்றாக்குறை சுமார் ஐ.அ.டொலர் 7,000 மில்லியனாகவிருக்கும். இறக்குமதிகளின் செலவு 2027 அளவில் ஏறத்தாள ஐ.அ.டொலர் 26,800 மில்லியனாகவிருக்கும் ஆதலால் இடம்பெறுகின்ற ஆண்டின் ஏறத்தாள அதேமட்டத்தில் வர்த்தகப் பற்றாக் குறையினை நிலைநிறுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

2021 இல் சுற்றுலா, துறைமுகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப முன்னிலையிலான ஏற்றுமதி சேவை கள் என்பவற்றிலிருந்து சுமார் ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் கொண்ட வர்த்தகமிகை எதிர்பார்க்கப்படுவதுடன் 2027 இல் அதனை ஐ.அ.டொலர் 8,000 மில்லியனாக அதிகரிப்பதற்கு இவ் வரவுசெலவுத்திட்ட உரையில் கொள்கைகளையும் வழிமுறைகளையும் எடுத்துரைத்துள்ளேன்.

வெளிநாட்டு தொழில் தொடர்பில் 2021 இல் தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 6,850 மில்லியனாகவிருக்கும் என்பதுடன் 2027 ஆம் ஆண்டளவில் அதனை ஐ.அ.டொலர் 8,000 மில்லியனுக்கு அதிகரிப்பது எனது மற்றுமோர் இலக்காகும்.

சர்வதேச நடைமுறைக் கொடுப்பனவுகள் மற்றும் கிடைக்கப்பெறத் தக்கவைகள் வடிவில் நிகழ்கின்ற பங்குலாபங்கள் வட்டிகள் போன்ற கொடுக்கல் வாங்கல்கள், வெளிநாட்டு முதலீடுகளில் வளர்ச்சிக்குப் பொருந்தும் வகையில் பேணப்பட வேண்டும். எனி னும் வர்த்தக நிதியிடலை நோக்கிய முனைப்பு காரணமாக எமது நாடு வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் வெளிநாட்டைத் தளமாகக் கொண்ட இலங்கை தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தனிப்பட்ட வர்களை கவரும் விதத்தில் தோற்றம்பெறவில்லை. ஆதலால் கொடுக்கல் வாங்கல்கள் நிலுவையும் பற்றாக்குறை யினை அனுபவிக்கின்றது. இங்கு சொல்லப்பட்ட பற்றாக்குறையானது ஆண்டுக்கு ஏறத்தாழ ஐ.அ.டொ 2,000 மில்லியனாகும்.

நான் விளக்குகின்ற மொத்தமும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையினை வெளிப்படுத்துகின்றது. இதனாலேயே, ஐ.அ.டொ. 11,000 மில்லியன் கொண்ட தற்போதைய பற்றாக்குறையினை 2027 ஆம் ஆண்டில் 6,000 மில்லியன் கொண்ட மிகை யாக மாற்றும் பொருட்டு மேலே குறிப்பிட்ட ஏற்றுமதிகள் சுற்றுலா தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளிநாட்டு தொழிலிருந்தான வருவாய்கள் என்பவற்றை நோக்கி கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையினால் சர்வதேச பொருட்கள் மற்றும் சேவைகள் வர்த்தகத்தினையும் அதேபோன்று சர்வதேச நிதியளித்தல் என்பவற்றை கையாளுகையில் அடுத்து வருகின்ற 5 வருட காலப்பகுதியினுள் ஒவ்வொரு ஆண்டும் சென்மதி நிலுவைக்கு ஐ.அ.டொ. 1,000 கொண்ட குறைந்தபட்ச மிகையினைச் சேர்ப்பது எம் அனைவரினதும் பொறுப்பாகவுள்ளது. சர்வதேச நடைமுறைக் கணக்கு மாற்றுதலும் இக்குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## மக்கள் அளித்த ஆணை

அரசாங்க வரவு- செலவுத் திட்டத்தினை சமநிலைப்படுத்தலென்பது ஒன்றில் வருடக்கணக்கான நிலைபேறான தீர்வுகளால் தீர்க்கப்படாமையின் காரணமாக அல்லது அரசியல் நோக்கில் பிரச்னை களை நோக்குவதன் காரணமாக குவிந்துள்ள பாரியளவு சமூகப் பொருளாதார சவால்களை முகாமை செய்வதில் எமது அடிப்படை மற்றும் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகத் தோற்றம் பெற்றுள்ளது. சுதந்திரம் பெற்றதிலிருந்து ஒவ்வொரு அரசாங்கமும் பற்றாக்குறை வரவு -செலவுத்திட்டக் கொள்கையொன்றினை நோக்கியே சாய்ந்திருந்தன. 1960 களில் தேசிய வருமானத்தில் சுமார் 6 சதவீதமாகவிருந்த இப்பற்றாக்குறை 1978 தொடக்கம் அவ்வப்போது 10 சதவீதத்தினை விஞ்சியது. 2020 - 2018 காலப்பகுதியில் இது சுமார் 7 - 8 சதவீதத்திற்கிடையில் தளம்பிக் காணப்பட்டதுடன் தற்போது இது மீண்டும் 10சதவீதத்தினை விஞ்சியுள்ளது. கிட்டத்தட்ட 70 ஆண்டுகளாக செயற்பாட்டிலிருக்கின்ற இக்கொள்கைகளின் விளைவாக இவ்விளைவுகளை நாம் தற்போது அனுபவிக்கின்றோம். மக்களின் பிரதிநிதிகளாக எங்கள் மத்தியிலும்கூட இப்போக்கிலிருந்து விடுபடுவதற்கான அரசியல் மனநிலையும் இப்பிரச்னையை காலந் தாழ்த்துகின்றவொன்றாகவுள்ளது.

மக்கள் எமக்களித்த ஆணை, எமது அதிகாரக் காலப்பகுதியினுள் அப்போக்கிலிருந்து விலகுவதன் மூலம் பொருளாதார ரீதியாக வலுவான நாடொன்றினை கட்டியெழுப்புவதற்கானதாகும் என நாம் கருதுகின்றோம். அரசாங்கத்தின் நிதியியல் நடவடிக்கைகள் வெறுமனே வரிகளைச் சேகரித்தல், கட்டணங்கள் மற்றும் அறவீடுக்டாக மேம்பாடடையாது. நிலைபேறான நிதியியல் ஒழுக்கமொன்றினை உருவாக்குவதற்கு அரசாங்க செலவினத்தை சிக்கனமாகவும் உற்பத்தித் திறன் மிக்க விதத்தில் கட்டுப்படுத்துவதும் அவசியமாகும். மீண்டெழும் செலவினத்தினை நிறைவேற்றுவதற்கு வருவாய் மூலங்களை தேடுகின்ற மரபுசார்ந்த அணுகுமுறைக்கு பதிலாக அரசாங்க வருவாய் மூலம் நிறைவு செய்யக்கூடிய மட்டங்களில் செலவினத்தை பேணுவதற்கான நிலைபேறான வழிமுறைகளுடன் அரச நிதி முகாமைத்துவ கலாசாரத்தினை கட்டியெழுப்புவதனையும் அத்தகைய வழிமுறைகளின் உற்பத்தித் திற னைத் தொடர்ச்சியாக மதிப்பிடுவதையும் நாம் இனிமேலும் காலந்தாழ்த்த முடியாது.




நலனோம்புகைச் செலவினம், பராமரிப்புச் செலவினம், அபிவிருத்திச் செலவினம் என்பவற்றை உரிய காலத்தில் பகிர்ந்தளித்தலானது வட்டி, சம்பளங்கள், ஓய்வூதியங்கள், கடன் தவணைக் கொடுப்பனவுகள், இப்பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட மீள் கொடுப்பனவு முன்னுரிமைகள் என்பவற்றுக்கு மத்தியில் தொடர்ச்சியான போராட்டமொன்றாக தோற்றம் பெற்றுள்ளது. அரசாங்க வருவாய் நியதிகளில் நிதியங்கள் மற்றும் இந்நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கடன்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் மற்றும் விரைவுகள் காரணமாக திறைசேரி அதன் தொழிற்பாடுகளில் தோல்வியேற்படும் தன்மையினை தொடர்ந்து எதிர்கொள்கின்றது. இதன் விளைவாக அரச நிதி முகாமைத்துவமானது நெருக்கடியொன்றாக தோற்றம்பெற்று தீர்ப்பனவு செய்யப்படாத வழங்குநர் கொடுப்பனவுகளுக்கு இட்டுச் செல்கின்ற அதே வேளை அபிவிருத்தியும் பொதுச் சேவையின் தரமும் ஸ்திரமற்றுக் காணப்படுகின்றது.

## மாற்றப்பட வேண்டிய பயணப் பாதை

இப் பயணப்பாதையை நாம் மாற்ற வேண்டியுள்ளது. சுமார் 72 ஆண்டுகளாகப் பேசப்படுகின்ற வரவு-செலவுப்பற்றாக்குறை, ஒட்டுமொத்த பொருளாதார செயன்முறையில் மையப்பிரச்னையாக தோற்றம் பெற்றுள்ளது. நடைமுறைப்படுத்துவதிலுள்ள இடர்பாடுகளை குறைத்து மதிப்பிடுவதன் மூலமாகவன்றி அரசாங்க வருவாயினையும் செலவினத்தையும் சமநிலைப்படுத்தக்கூடிய மக்கள் வரவுசெலவுத்திட்ட முகாமைத்துவத்தை நாம் அணுகவேண்டிய பல எண்ணிக் கையான வழிகளை நான் எடுத்து ரைத்தேன். யதார்த்தத்தை நாம் எதிர்கொள்ள வேண்டும். ஆகையினால் எமது தொலைநோக்கு வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையினை தற்போதய தேசிய வருமான மட்டத்தின் 10 சதவீதத்திலிருந்து 2027 அளவில் 1.5 சதவீதத்திற்கு குறைக்கும் விதத்தில் ஒட்டுமொத்த வரவு - செலவுத் திட்டத்தினையும் முகாமை செய்வதாகும். தற்போது தேசிய வருமானத்தின் 9 சதவீதமாகவுள்ள அரசாங்க வருவாயினை 2027 அளவில் 18 சதவீதத்திற்கு அதிகரிக்கக்கூடிய வகையில் வரி நிர்வாகத்தை நாம் வலுப்படுத்த வேண்டியுள்ளதுடன் வரித் தளத்தினை விரிவுபடுத்துகின்ற அதேவேளை தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்கள் மத்தியில் வரி இணங்குவித்தலினை அதிகரிக்கின்ற பொருளாதார அபிவிருத்தியினை அறிமுகப்படுத்த வேண்டும்.

ஏலவே நான் குறிப்பிட்டதுபோன்று தனிப்பட்ட சேமிப்புகளை ஊக்குவிப்பதற்கு மேலதிகமாக அதன் வரவு- செலவுத்திட்ட முகாமைத்துவத்தினூடாகவும் அரசாங்கம் சேமிக்க வேண்டியுள்ளது. இதன் நோக்கம் தற்போது தேசிய வருமானத்தின் சதவீதமாக சுமார் 16 சதவீதம் காணப்படுகின்ற மீண்டெழும் செலவினத்தை 2027 அளவில் 13 சதவீதத்திற்கு குறைப்பதன் மூலம் வரவு செலவுத்திட்ட சேமிப்புகளை 5 சதவீதத்திற்கு அதிகரிப்பதாகும். இதில் தீர்க்கமான ஆண்டு 2024 ஆம் ஆண்டாகும்.

## அபிவிருத்தி செலவீனம்

தேசிய வருமானத்தின் சுமார் 3.5 சதவீதமாக தற்போது காணப்படுகின்ற அபிவிருத்திச் செலவினம் 2024 அளவில் 6 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எதிர் பார்க்கப்படுவதுடன் 2027 அளவில் சுமார் 7 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் அர்த்தம் இதுவரையிலும் கடன்கள் மீது தங்கியி ருக்கின்ற அபிவிருத்திச் செலவினம் வரவு- செலவுத் திட்ட சேமிப்புகள் மீது அதிகரித்தளவில் தங்கியிருக்க லாம் என்பதாகும். தற்போது சுமார் 102 சதவீதமாகவுள்ள அரசாங்கப் படுகடனை அத்தகைய அரசநிதி முகாமைத்துவத்தினூடாக மாத்திரமே 74 சதவீதத் திற்கு குறைக்கக்கூடியதாகவிருக்கும். இங்கு தேசிய வருமா னத்தின் சதவீதமாக வெளிநாட்டுப் படுகடனை 36.5 சதவீதத்திலிருந்து 13.6 சதவீதத்திற்கு குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்குள் இவ் வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகள், ஐ.அ.டொ 8,000 மில்லியன் கொண்ட ஏற்கனவே குறைக்கப்பட்ட நாட்டுக்கான பன்நாட்டு முறிக் கடன்களை மேலும் குறைப்பதனையும் நிலை பேறான நிதியளித்தலூடாக வெளிநாட்டுக் கடன் களின் உள்ளமைப்பினை மாற்றுவதனையும் உள்ள டக்குகின்றன.

நான் சமர்ப்பிக்கின்ற எனது வரவு செலவுத்திட்ட தொலைநோக்கானது நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து செல்லவேண்டிய சவால்மிக்க பாதையாகும். இது பற்றாக்குறையான வரவு - செலவுத் திட்டப் பாதையொன்று என்பதைவிட மிகவும் ஒழுக்கம்மிக்க அரச நிதி கட்டுப்பாடாகும். இதனைப் பழக்கப்படுத்திக் கொள்வது முதலில் கடினமானதாக இருக்கலாம். ஆயினும் நாட்டினை, தேசத்தினை அத்துடன் பொருளாதாரத்தினை வலிமைப்படுத்துவதற்கு இதுவே பாதையாகும் என்பதனை நான் உறுதியாக வலியுறுத்துகின்றேன்.


பல அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் சுபீட்சம்மிக்க நிலங்களாக தற்போது தோற்றம் பெற்றுள்ளன. எமது நாட்டின் புத்தி ஜீவிகளும் வர்த்தகர்களும் அந்நாடுகளில் தொழிலுக்காக சென்றுள்ளனர். நவீன விமான நிலையங்கள், துறைமுகங்கள், அதிவேகப் பாதைகள், அடுக்குமாடிமனைகள் போன்ற பௌதிக உட்கட்டமைப்பின் காரணமாக மாத்திரம் அந்நாடுகள் சுபீட்சம்பெறவில்லை. அவற்றின் தேசிய பொருளாதாரம் வலிமை மிக்கதாக உருவாகியது. வங்கிகள், துறைமுகங்கள், சுங்கம், உள்நாட்டு இறைவரி போன்ற நிறுவனங்கள் தொழில்நுட்ப சேவைகள் ஊடாக வேறுநாடுகளுடன் இணைந்து ஒன்றன்பின் ஒன்றாக அபிவிருத்தியடைந்தன. அந்நாடுகள் முதனிலை மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக பெறுமதி சேர்க்கப்பட்ட கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பசார் உற்பத்திகளை மிகையாக்கின 70 வருடங்க ளுக்குமேல் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டங்களை பேணுவதற்குப் பதிலாக செலவினத்தை விஞ்சுகின்ற அரசாங்க வருவாயினை அவை அதிகரித்து வரவு-செலவுத் திட்டத்தினுள் சேமிப்பினை உருவாக்கின. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்


12) இவ்வுருவை முழுமையான பூரண சதுரமாக்குவதற்கு உருவுடன் சேர்க்க வேண்டிய சிறிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?




1) 7
2) 16
3) 13

13) உருவின்படி புள்ளியிடப்பட்ட பாதையின் நீளம் யாது?

1) 55m
2) 53m
3) 51m








14) 

உருவில் காட்டப்பட்டுள்ள உருளை வடிவத்தினைப் புள்ளிக் கோடுகள் வழியே வெட்டி அவற்றை வேறாக்கிய போது பெறப்பட்ட உருக்களில் உள்ள வளைந்த விளிம்புகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 8 2) 4 3) 12

15) ஊடு தெரியக் கூடிய கடதாசியினை மடித்துப் பார்க்கும் போது தெரியும் உருவைத் தெரிவு செய்க.



1)  2)  3) 

❖ 16ஆம், 17ஆம் வினாக்களில் தரப்பட்ட நான்கு சொற்களில் பொருந்தாத சொல்லினைத் தெரிவு செய்க.


16) காயம் , புயம், சரீரம், யாக்கை

1) புயம் 2) காயம் 3) யாக்கை

17) கிடங்கு , அகழி , கேணி , மார்க்கம்

1) அகழி 2) கேணி 3) மார்க்கம்

18) பாடசாலைக்கு மாணவர்கள் வருகை தரும் விபரம் வட்டவரைபில் தரப்பட்டுள்ளது. அதன் படி மிகச் சரியான கூற்று யாது?





1) நடந்து செல்பவர்களின் எண்ணிக்கையினை விட பேருந்தில் அதிகமானோர் செல்கின்றனர்.
2) காரில் செல்பவர்களின் எண்ணிக்கையின் இரு மடங்கினர் சைக்கிளில் செல்கின்றனர்
3) மொத்த மாணவர்களில் 3/8 பங்கினர் நடந்து செல்கின்றனர்.

19) 50 தொடக்கம் 60 வரை எண்களை எழுதும் போது இலக்கம் ஐந்து தனித்து எழுதப்படும் சந்தர்ப்பங்கள் எத்தனை?

1. 11 2) 10 3) 9


20) இரண்டு பொறிகள், இரண்டு நாட்களில், இரண்டு பொறிகளை உற்பத்தி செய்யும். எனின் 5 பொறிகள். 4 நாட்களில் எத்தனை பொறிகளை உற்பத்தி செய்யும்.


1. 05 2) 20 3) 10




21) 


உருவின் படி A,B ஆகிய எழுத்துக்கள் குறிக்கும் சொற்கள் குறித்து நிற்பவை முறையே

1) மைனா, சிங்கம்
2) புறா, தாரா
3) புலி, சேவல்

❖ 22 ஆம் , 23ஆம் வினாக்களில் 2,3,4 எனும் இலக்கங்களுக்குப் பதிலாக  எனும் உருக்கள் ஒழுங்கின்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளன எனின் இடைவெளியில் வரும் உருவைத் தெரிவு செய்க.

22) 

1)  2)  3) 

# அரசின் அடக்குமுறைகளுக்கு இனியும் அஞ்சப்போவதில்லை

## கொழும்பில் நாளை ஆர்ப்பாட்டத்தை நடத்தியே தீருவோம் என்று சஜித் அணியினர் சூளுரை

கொழும்பு, நவ. 15

**"அரசின் அடக்குமுறைக்கு இனியும் அஞ்சப்போவதில்லை. அதற்கான ஜனநாயக உரிமை எமக்கு உண்டு. கொழும்பில் நாளை ஆர்ப்பாட்டத்தை நடத்தியே தீருவோம்."**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இந்த நாட்டை பஞ்சத்துக்கு இட்டுச் செல்லும் அரசே ஆட்சியில் இருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

16 ஆம் திகதி (நாளை) அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை அரசு தடுத்துள்ளது. நாட்டில் சகலவற்றுக்கும் வரிசையில் நிற்கும் யுகத்தை ஏற்படுத்தி மக்களை இந்த அரசு இன்னல்களுக்கு ஆழ்த்தியுள்ளது.

இவற்றுக்கு எதிராக மக்கள் வீதிகளுக்கு இறங்கியுள்ளனர். மக்கள் வெளிப்படுத்தும் எதிர்ப்பை ஒன்றுதிரட்டி வெகுஜன எதிர்ப்பை அரசுக்குக் காண்பிக்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்குப் பொறுப்புள்ளது.

இதற்காக 16 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தோம். அரசின் இந்த அடக்குமுறைக்கு இனியும் அஞ்சப்போவதில்லை. அதற்கான ஜனநாயக உரிமை எமக்கு உண்டு, ஆர்ப்பாட்டத்தை நடத்தியே தீருவோம்.

எமது போராட்டத்தை நசுக்கவே 250, 300 என்று கொரோனா மரணங்கள் நிகழும்போது பிறப்பிக்காத வர்த்தமானிகளை



சுகாதாரப் பணிப்பாளர் ஊடாக அரசு வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி கொழும்பு ஹைட் பார்க் பகுதியில் அரச எதிர்ப்புப் போராட்டம் இடம்பெறும். பொய்யான சட்டங்களுக்கும், பொய்யான அச்சுறுத்தல்களுக்கும் நாங்கள் அஞ்சமாட்டோம் என்பதை அரசுக்குச் சொல்லிக்கொள்ளுகின்றோம்.

அரசின் வரவு - செலவுத் திட்டம் இந்த நாட்டில் பொருட்களின் விலையேற்றத்தால் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான எந்தத் தீர்வும் இல்லை.

அறுவடை குறைந்தால் விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதாக விவசாய அமைச்சர் கூறினார். வரவு - செலவுத்திட்டத்தில் அப்படி ஒன்றே இல்லை. இது விவசாயிகளை வெறுமனே ஏமாற்றும் செயலாகும். ஓய்வூதிய வயதை அதிகரித்தது அரச ஊழியர்களின் மீதுள்ள இரக்கத்தில் அல்ல. அவர்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்த பணமில்லை என்பதே உண்மை. அரச ஊழியர் ஓய்வு பெறும் போது உதவித் தொகையை செலுத்த முடியாததாலேயே இவ்வாறு செய்துள்ளார்கள். இது வெற்று ஏமாற்று வேலை" - என்றார். (இ)

# வவுனியாவில் 17 பேர் மாணவர்கள் உட்பட மேலும் 47 பேருக்கு தொற்று

வவுனியா, நவ. 15

வவுனியாவில் 17 மாணவர்கள் உட்பட மேலும் 47 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனடாஹ் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர், தாமாக முன்வந்து பரிசோதனை செய்தோர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டோர் ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனையின் முடிவுகளின் ஒரு தொகுதி நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின. அதில் வவுனியாவில் 17 மாணவர்கள் உட்பட 47 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மறவன்குளம், தோணிக்கல், பூந்தோட்டம், சிறிராமபுரம், சிதம்பரபுரம், வன்னிக் கோட்டம், பூவரசன்குளம், அம்பலாங்கொடவல உள்ளிட்ட பகுதிகளிலேயே மாணவர்கள் தொற்



றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேலும், ஒரு வயது, இரண்டரை வயது, 5 வயது குழந்தைகளும் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைச் சிகிச்சைக்காகத் தனிமைப்படுத்தவும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியாவில் மீண்டும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர். (இ)

# எதிர்க்கட்சிகள் தம்பட்டம் அடிப்பதில் பயனில்லை!

## வர்த்தக அமைச்சர் பந்துல

கொழும்பு, நவ. 15

"நாடு மூன்று நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள நிலையிலும் நிதி அமைச்சர் இந்த வரவு - செலவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. இன்று எதிர்க்கட்சிகள் என்னதான் தம்பட்டம் அடித்தாலும், அது பயனற்றது."

- இவ்வாறு வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- "கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தடுப்பூசி வழங்கும் திட்டங்களில் மிகவும் வெற்றிகரமான நாடுகளில் ஒன்றாக இலங்கை திகழ்கின்றது.

பணக்கார வர்த்தகர்களின் வரி விதிப்புக்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவிப்பது ஏன்?" என்றும் அவர் கேள்வி எழுப்பினார். 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதையடுத்து எதிர்க்கட்சிகள் தமது அதிருப்தியை வெளியிட்டு வருகின்றன. சோமாலிய, எத்தியோப்பிய பாணியிலான வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் சமர்ப்பித்துள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். (இ)

# விபத்துக்களை குறைக்க சாரதிகளுக்கு 2 வார பயிற்சி

கொழும்பு, நவ. 15

நாளுக்கு நாள் அதிகரிக்கும் வீதி விபத்துக்களைக் குறைத்துக்கொள்ளும் நோக்கில் வீதி ஒழுக்கம் தொடர்பில் சாரதிகளுக்கு விசேட பயிற்சி வழங்குவதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்வதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தலைமையில் நடைபெற்ற பொது மக்கள் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் புலப்பட்டது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை இடம்பெற்ற வீதி விபத்துக்கள் காரணமாக 1,948 உயிர்களை இழந்திருப்பதாவும், கடந்த 10 வருடங்களில் சுமார் 27 ஆயிரம் பேர் இறந்துள்ளதாகவும் குறிப்பிட்ட அமைச்சர் சரத் வீரசேகர, வீதி ஒழுங்குகளை பாதுகாக்கும் வகையில் இலங்கை பொலிஸ் உள்ளிட்ட நிறுவனங்களின் பங்களிப்பில் விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

தண்டப்பணம் செலுத்தும் முறையில் காணப்படும் குறைபாடுகளை தவிர்த்துக்கொள்ள உடனடியாக தண்டப்பணம் செலுத்தும் முறை மற்றும் சாரதி மதிப்பெண் முறையை விரைவில் அறிமுகப்படுத்துவதாகவும், இதற்கான துரித வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு சாரதிகளின் ஒழுக்கமின்மை பிரதான காரணம் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது. இந்நிலையைத் தவிர்ப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றின் தேவை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களால் குழுவில் முன்வைக்கப்பட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த வாகன ஒழுங்குறுத்துகை, பஸ் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார்வாகன கைத்தொழில் மற்றும் சமூகப் பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, வீதி ஒழுங்குகள் தொடர்பில் சாரதிகளை விழிப்பூட்டும் நிகழ்ச்சி ஒன்று திட்டமிடப்பட் டுள்ளதாகவும், நிலவும் கொரோனா சூழலில் அது தாமதமடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதற்கமைய அதன் முதற்படியாக மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சாரதிகளுக்கு 2 வார பயிற்சியை விரைவில் ஆரம்பிப்பதாகவும் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இதுவரை மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சரதிகள் சுமார் 17 ஆயிரம் பேர் சேவையாற்றுவதாகவும், அடிக்கடி இடம்பெறும் பஸ் விபத்துக்கள் தொடர்பில் அவர்களின் ஒழுக்கத்தை பேணுவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் இராஜாங்க அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

தொழிற்சங்க நடவடிக்கைகளோ ஆர்ப்பாட்டங்களோ இன்றி மிகக் கடினமான நிலையில் பணியாற்றும் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உரிய கொடுப்பனவுகள் மற்றும் சம்பளம் வழங்குவதன் அவசியம் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். கடந்த கொரோனா நிலை மையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 15 ஆயிரத்து 700 பேர் பாதிக்கப்பட்டதுடன், 44 பேர் உயிரிழந்துள்ளனர் என்று குறிப்பிட்ட அமைச்சர், பல் வேறு சிரமங்களுக்கு மத்தியில் செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுப்பது தொடர்பில் தனது நன்றியைத் தெரிவித்தார்.

குற்றச் செயல்கள் தொடர்பில் ஊடகங்களில் அறிக்கை யிடும் போது பொலிஸார் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இதன்போது நீண்டநேரம் கலந்துரையாடப் பட்டது.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பொலிஸார் ஊடகங்களில் கருத்துக்களை வெளியிடுவது சிக்கலானது என்பதால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார். (இ)



# இந்தோனேசிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் தீ!

ஜகார்த்தா, நவ. 15

உலகின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் ஜாவாவின் மத்திய பகுதியான சிலகாப் பகுதியில் அமைந்துள்ள எண்ணெய் மற்றும் எரிவாயு சுத்திகரிப்பு நிலையமே இவ்வாறு தீப்பற்றி எரிந்தது.

இதையடுத்து, சுத்திகரிப்பு நிலையத்துக்கு அண்மையாக வசித்துவந்த 80 குடியிருப்பாளர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சிலாகாப் சுத்திகரிப்பு வளாகத்தில் உள்ள 228 சேமிப்பு தொட்டிகளில் ஒன்றை தீ பாதித்தது. மேலும், தீயை முழுமையாக அணைக்கும் பணிகள் இன்னும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பெர்டமினா உலகின் மிகப்பெரிய சுத்திகரிப்பு நிலையங்களில் ஒன்றாகும் மற்றும் தேசிய எரிபொருள் தேவையில் 34 சதவீதத்தை இது வழங்குகிறது. (ஐ)

# பூஸ்டர் டோஸ்ம் ஊழலே; உலகம் தடுக்க வேண்டும்!

உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

ஜெனிவா, நவ. 15

கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் என்பது ஓர் ஊழல். இதை உலக நாடுகள் தடுக்க வேண்டும் என்று உலக சுகாதார ஸ்தானம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவரான டெட்ரோஸ் அதனோம் கூறுகையில், “வருமானம் குறைந்த நாடுகளில் போடப்படும் முதல் டோஸ் தடுப்பூசியை காட்டிலும், வளர்ந்த நாடுகளில் ஒவ்வொரு நாளும் சராசரியாக 6 மடங்கு அதிகளவில் பூஸ்டர் டோஸ்கள் செலுத்தப்படுகின்றன.

கொரோனா தடுப்பூசி உலகின் அனைத்து பகுதிகளுக்கும் சென்றடைய வேண்டும். ஏழை நாடுகளுக்கு தடுப்பூசிகள் விநியோகிக்கப்பட்ட பின்னர் - குறைந்தது ஒரு வருடத்தின் பின்னரே பூஸ்டர் டோஸ்களை வழங்குவது குறித்து வளர்ச்சியடைந்த நாடுகள் முடிவு எடுக்கலாம். அதுவரை, பூஸ்டர் டோஸ் வழங்குவதை தவிர்க்க வேண்டும்.

ஏழை நாடுகளில் முன்கள பணியாளர்கள், வயதாளிகள் மற்றும் இணை நோய்களால் பாதிக்கப்பட்ட பலர் தடுப்பூசியையே பெறாமல் உள்ளனர். இந்நிலையில், வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஆரோக்கியமான நபர்கள் மற்றும் சிறுவர்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்படுவது தற்போதைக்கு பிரதான விசயம் அல்ல.

எத்தனை பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்பதை விட , யாருக்கெல்லாம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என்பதுதான் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது - என்றார். (ஐ)

# 64 பெண்கள், சிறுவர்களை கொன்று சிரியாவில் அமெரிக்கா போர் குற்றம்

## அம்பலப்படுத்தியது நியூயோர்க் ரைம்ஸ்

நியூயோர்க், நவ. 15

2019 இல் இஸ்லாமிய அரச (ஐ. எஸ்.) குழுவுக்கு எதிரான போரின் போது சிரியாவில் 64 பெண்கள் மற்றும் சிறுவர்களை கொன்ற வான்வழித் தாக்குதல்களை அமெரிக்கா மூடிமறைத்தது என்று நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இது சாத்தியமான போர்க் குற்றம் என்றும் நியூயோர்க் ரைம்ஸ் சனிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

2019 மார்ச் 18, அன்று, சிரியாவில் ஐ. எஸ். அமைப்பின் கடைசி கோட்டையான பகுஸ் அருகே வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று நியூயோர்க் ரைம்ஸ் கூறுகிறது.



சிரியாவில் அமெரிக்க விமான நடவடிக்கைகளை மேற்பார்வையிட்ட அமெரிக்க மத்திய கட்டளை, இந்த வாரம் முதல் முறையாக குறித்த தாக்குதல்களை ஒப்புக்கொண்டதாகவும், அவை நியாயமானவை என்று கூறியதாகவும் செய்தித்தாள் சுட்டிக்காட்டியுள்ளது.

16 ஐ. எஸ். குழுவின் போராளிகள் மற்றும் நான்கு பொதுமக்கள் உட்பட 80 பேர் தாக்குதலில் உயிரிழந்தமை தொடர்பில் செய்தித்தாள் கொடுத்த கணக்கை மத்திய கட்டளை மீண்டும் வலியுறுத்தியது.

மற்றைய 60 பேரும் பொதுமக்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை, ஏனெனில், பெண்களும் சிறுவர்களும் போராளிகளாக இருந்திருக்கலாம் என்று மத்திய கட்டளை இராணுவம் கூறியது. (ஐ)

# தந்தையின் கட்டுப்பாட்டிலிருந்து பிரிட்னியை விடுவித்தது நீதிமன்று

நியூயோர்க், நவ. 15



அமெரிக்காவின் பிரபல பாடகியான பிரிட்னி ஸ்பியர்ஸை அவரின் தந்தையின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து உத்தரவிட்டுள்ளது நீதிமன்றம்.

39 வயதான பிரிட்னி, பாடகி, பாடலாசிரியர், நடிகை என பன்முகத் தன்மை கொண்டவர். இளம் வயதிலேயே பிரபலமான இவர், 2008ஆம் ஆண்டு முதல் தனது தந்தையான ஜேமி ஸ்பியஸின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தார்.

இதனால், பொருளாதாரம், வாழ்க்கை சார்ந்து எந்த ஒரு முடிவையும் எடுக்கும் உரிமை தனக்கு மறுக்கப்படுவதாக பிரிட்னி குற்றஞ்சாட்டினார். குறிப்பாக தனது காதலரான நடிகர் சாம் அஸ்காரியை (வயது 27) திருமணம் செய்யவும் அனுமதி மறுக்கப்பட்டது.

இதனால், தந்தையின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேற வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த லொஸ் ஏஞ்சல்ஸ் உயர் நீதிமன்று பிரிட்னியை தந்தை கட்டுப்படுத்துவதற்கு இடைக்கால தடை விதித்தது.

# ‘பேஸ்புக்’ பார்த்தால் கன்னத்தில் அடிக்க ஆள்வைத்த தொழிலதிபர்!

வாஷிங்டன், நவ. 15

பேஸ்புக் பார்த்தால் தன்னை கன்னத்தில் ஓங்கி அடிப்பதற்காக ஒருவரை வேலைக்கு வைத்த தொழிலதிபர் உலகம் முழுவதும் பிரபலமானதுடன், அவரின் வருமானமும் 98 வீதத்தால் உயர்வடைந்துள்ளது.

இந்த சுவாரசிய சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

இந்திய வம்சாவளியான அமெரிக்கரான மனீஷ் சேத்தி 2012இல் பாவ்லொக் என்ற நிறுவனத்தை தொடங்கினார். ஆனால், அவர் எதிர்பார்த்த இலாபம் வரவில்லை. இது தொடர்பில் ஆராய்ந்த அவர் தான், பல மணிநேரத்தை பேஸ்புக்கிலேயே செலவிடுவதுதான் காரணம் என்று அறிந்து கொண்டார்.

எனவே, பேஸ்புக் பார்ப்பதை நிறுத்த முடிவு செய்தார். ஆனால், அவரால் மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால், பேஸ்புக் பார்த்தால் தன்னை கன்னத்தில் ஓங்கி அறையுமாறு பெண் ஒருவரை பணிக்கு அமர்த்தினார்.

இதற்காக, காரா என்ற அந்தப் பெண்ணுக்கு ஒரு மணி நேரத்துக்கு 8 டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 1600 ரூபாய் வழங்கப்படுகின்றது. இந்த நிலையில், சேத்தியின் நிறுவனத்தின் இலாபம் 98 வீதமாக அதிகரித்தது.

இது தொடர்பான தகவலை சேத்தி தனது ருவிட்டர் பக்கத்தில் பகிர, அது பிரபலமானது. இந்த பதிவை ரெஸ்லா நிறுவன தலைமை நிர்வாகியும் - உலகப் பணக்காரர்களில் ஒருவருமான எலான் மஸ்க் ‘நெருப்பு’ அடையாளம் போட்டுள்ளார். (ஐ)



# எலிஸே மாளிகை படை வீரர் மீது பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு!

பாரிஸ், நவ. 15

பிரான்ஸின் ஜனாதிபதி மாளிகையில் பணியில் இருந்த பெண் படைச் சிப்பாய் ஒருவர் தனது சக படை வீரர் ஒருவரால் தான் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார் என்று முறையிட்டிருக்கிறார். அவரின் முறைப்பாடு தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பாரிஸ் அரச சட்டவாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

எலிஸே மாளிகையில் கடந்த ஜூலை மாதம் நடந்ததாகக் கூறப்படுகின்ற இந்தக் குற்றம் தொடர்பான தகவலை முதலில் “லிபரேஷன்” நாளிதழ் வெளியிட்டிருந்தது. பணியில் இருந்து விடுபட்டுச் சென்ற இரண்டு ஜெனரல்களின் வழியனுப்பு வைபவம் ஒன்றின் போதே பெண் சிப்பாய்மீது இந்த முறைகேடு புரியப்பட்டது. இந்த வைபவத்தில் அதிபர் இமானுவல் மக்ரோனும் கலந்து கொண்டார் என்ற தகவலை “லிபரேஷன்” வெளியிட்டிருந்தது.

31 வயதான அந்தப் படைச் சிப்பாய் அரசுத் தலைவரின் பாதுகாப்பு மற்றும் பணிகளில் ஈடுபடுகின்ற அலுவலர்கள் பிரிவில் ஒருவராகக் கடமையில் ஈடுபட்டிருந்தவர் என்றும், பாலியல் குற்றச்சாட்டை அடுத்து அவர் பொலிஸ் நிலையம் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பிறகு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக உடனடியாக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் ஊடகங்களில் தகவல் வெளியாகி உள்ளது.

முறைப்பாடு செய்த பெண் சிப்பாயும், குற்றம் புரிந்தவர் எனக் கூறப்படும் வீரரும் ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்பு மற்றும் இரகசியங்களுடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்த விவகாரத்தை எலிஸே மாளிகை தீவிர கவனத்தில் எடுத்துள்ளது என்றும் தேவையான சகல நடவடிக்கைகளும் உடனடியாகச் செய்யப்பட்டுள்ளன என்றும் அரசாங்கப் பேச்சாளர் கப்ரியேல் அட்டால் கூறியிருக்கிறார். (அ)

# ‘யுகதனவிய’ ஒப்பந்தம் சட்டவிரோதமானது ஏகபோக உரிமையை அமெரிக்கா பெறுகிறது

## பாராளுமன்றத்தில் ரணில் சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ.15

**கெரவலபிட்டி யுகதனவி ஒப்பந்தம், சட்டத்தை மீறி மேற்கொள்ளப்பட்டிருப்பதனால் இந்த ஒப்பந்தம் சட்டவிரோதமானது. அதுமட்டுமன்றி அரசு கெரவலப்பிட்டிக்கு எரிவாயு விநியோகிக்கும் ஏகபோக உரிமையை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கியுள்ள தென முன்னாள் பிரதமரும் ஐ. தே. க. எம்.பி.யுமான ரணில் விக்கிரம சிங்க குற்றம்சாட்டினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிறுப்புரிமை மீறல் தொடர்பான கூற்றொன்றை முன்வைத்த போதே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

“நிலையியல் கட்டளையின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் அல்லது இராஜாங்க அமைச்சர் பதிலளிக்க வேண்டும். அமைச்சர்களுக்கு - பாராளுமன்றத்துக்கு கூட்டுப் பொறுப்பு இருக்கின்றது. அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்கு தகவல்களை வழங்குவதை தடுக்க முடியாது.

கெரவலப்பிடிய யுகதனவிய மின் உற்பத்தி நிலையம் தொடர்பாக இலங்கை அரசுக்கும் என்.எவ்.பி. சிறீலங்கா பவர் ஹோல்டிங் நிறுவனத்துக்கும் இடையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்த ஒப்பந்தம் சட்ட ரீதியானது என சட்டமா அதிபரும் தெரிவித்திருக்கின்றார். ஆனால், அரசு செய்துள்ள ஒப்பந்தத்தின் பிரதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதனால் இதுதொடர்பாக கலந்துரையாட சட்டமா அதிபர், அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் திறைசேரியின் செயலாளர் ஆகியோரை பாராளுமன்றத்துக்கு அழைக்க வேண்டும்.

இதேவேளை பாராளுமன்றமும் எம்மை ஏமாற்றியுள்ளது. எரிவாயு விநியோகிக்க யாருக்கும் ஏகபோக உரிமை இல்லை என பாராளுமன்றம் தெரிவித்திருக்கின்றது. ஆனால் அது உண்மையல்ல. ஒப்பந்தத்தில் கெரவலப்பிடிட்டியவுக்கு எரிவாயு விநியோகிக்கும் ஏகபோக உரிமை இந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. திரவ இயற்கை எரிவாயு தேவை என்றால் இந்தியா, ஜப்பானில் இருந்து திருகோணமலைக்கு கொண்டுவர முடியாது. கொண்டு வருவதாக இருந்தால் கொழும்பு கெரவலப்பிடிக்கு மாத்திரமே கொண்டுவர முடியும். அப்படியானால் ஏகபோக உரிமை இந்த அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது

யுகதனவிய மின் உற்பத்தி நிலையத்துக்கு திரவ இயற்கை எரிவாயு விநியோகிக்கும் ஏகபோக உரிமையை குறித்த நிறுவனத்துக்கு வழங்குவது சட்டத்துக்கு முரணானது.அதனால் இந்த ஒப்பந்தம் தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதிக்கவேண்டும். கட்சித் தலைவர்களை கூட்டி இது தொடர்பாக ஆராயவேண்டும். சுமந்திரன் எம். பி. வெளிநாடு சென்றுள்ளார். அவர் வந்த பின்னரும் வரவு - செலவுத் திட்ட விவாதம் முடிந்த பின்னர் அல்லது ஜனவரியில் இதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த ஒப்பந்தம் பாராளுமன்றத்தின் சிறப்புரிமையை மீறியுள்ளது என்றார் .

இதன்போது எழுந்த எதிர்க்கட்சி பிரதமகொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. , பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்கும் தகவல்களை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பது அரசின் கடமை. ஆனால், யுகதனவிய ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஒரு சரத்தில், இந்த ஒப்பந்தத்தை யார் கேட்டாலும் வழங்குவதில்லை என குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அரசாங்கம் சர்வதேச ஒப்பந்தங்களை செய்யும்போது அந்த ஒப்பந்தத்தை பாராளுமன்றத்துக்கு வழங்கவேண்டும். வழங்க முடியாது என தெரிவிக்க முடியாது என்றார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, கட்சித் தலைவர்களை கூட்டி இது தொடர்பாக ஆராய முடியுமெனவும் அத்துடன் விவாதமொன்றை நடத்தவது தொடர்பிலும் . தீர்மானிக்க முடியும்” என்றார்.

# பஸிலின் இறுதி வரவு - செலவு திட்டமாகவும் இது இருக்கும்

## பாராளுமன்றில் ஐக்கிய மக்கள் சக்தி எம். பி.

கொழும்பு, நவ. 15

2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டம் தனது முதலாவது வரவு- செலவுத் திட்டம் என்று நிதிமச்சர் பஸில் ராஜபக்ஷ கூறினார். ஆனால், இதுவே இந்த அரசின் இறுதி வரவு - செலவுத் திட்டமாக இருக்கும் என்று தெரிவித்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. கபீர் ஹாசிம், சீனி, பருப்பு விலையை கட்டுப்படுத்த முடியாத ஜனாதிபதி நாட்டை, நாட்டின் பாதுகாப்பை எவ்வாறு உறுதிப்படுத்தப்போகின்றார் எனவும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஆரம்பத்திலேயே வட் விரியை குறைத்ததால் நாட்டின் வருமானம் 600கோடி ரூபாய் இல்லாமல் போனது. வரி குறைவடைந்தால் அதன் நன்மை மக்களுக்கு கிடைக்க வேண்டும். ஆனால், வரி குறைப்பினால் பொருட்களின் விலைகள் குறைவடைய வில்லை. அப்படியானால் அந்த பணம் அரசாங்கத்துக்கு தேவையானவர்களுக்கே சென்றிருக்கின்றது.

அரசின் வருமானம் குறைவடைந்ததால் பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. அத்துடன் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அந்த பிரச்சினைகளை தெரிவித்தே, அதற்கு தீர்வு காணும் வகையில் வரவு - செலவு திட்டத்தில் முன்மொழிவுகள் வைக்கப்படவேண்டும். ஆனால் அவ்வாறான எந்த விடயங்களும் இந்த வரவு - செலவுத் திட்டத்த்தில் முன்வைக்கப்படவில்லை. அரசு யுகதனவிய பங்கை அமெரிக்காவுக்கு ஒரு சதமேனும் வரி இல்லாமல் வழங்கி யுள்ளது. எமது நாட்டின் வருமானத்தையே அரசு அமெரிக்காவுக்கு கொடுத்துள்ளது. ஆனால், எமது நாட்டில் சாதாரண மக்களிடமும் வரி அறவிடுகின்றது. வெளிநாட்டு முதலீடுகள் என்பது எமது நாட்டின் வளங்களை விற்பனை செய்வதல்ல. உற்பத்தியை அதிகரிப்பதாகும். ஆனால், அரசாங்கம் அனைத்தையும் கொரானோவை காரணம் காட்டி மூடி மறைத்துள்ளது.

பொருட்களின் விலை அதிகரித்து செல்லும்போது அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தபோது சீனி, பருப்பு விலையை கட்டுப்படுத்த எனக்கு முடியாது, அதற்காக மக்கள் என்னை தெரிவுசெய்யவில்லை என ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். சீனி,பருப்பு விலையை கட்டுப்படுத்த முடியாத ஜனாதிபதியால் நாட்டை, நாட்டின் பாதுகாப்பை எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்.

நாட்டில் 2020 ஆம் ஆண்டில் வறுமை கோட்டுக்குள் 5இலட்சம் பேர் சேர்ந்துள்ளதாகவும் 2021இல் உரப்பிரச்னை காரணமாக பாதிக்கப்பட்ட காரணத்தினால் மேலும் 5இலட்சம் பேர் இந்த வரிசையில் இணைக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் செலவுக்காக ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையிலேயே குறைந்தளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது மாலை தீவு தமது தலா வருமானத்தில் 6.9 வீதத்தையும், இந்திய தமது தலா வருமானத்தில் 3.5 வீதத்தையும், பாகிஸ்தான் 2 வீதத்தையும் செலவிட்டுள்ளன.இலங்கையில்



0.8 வீதமே அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் வரவு - செலவு திட்டத்தில் மக்கள் எதிர்பார்த்த எந்த விடயங்களும் இல்லை. மாறாக கம்பனிகளுக்கு வரியை அதிகரித்திருக்கின்றது. அதேபோன்று வரவு - செலவு திட்டத்தின் யோசனைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்ற எந்த திட்டங்களும் இல்லை.எனவே 2022 ஆவது ஆண்டுக்கான வரவு- செலவு திட்டம் தனது முதலாவது வரவு - செலவுத்திட்டம் என்று நிதிமச்சர் பஸில் ராஜபக்ஷ கூறினார். ஆனால் அதுவே இந்த அரசின் இறுதி வரவு- செலவுத்திட்டமாக இருக்கும்” என்றார்.

# புத்தளத்தில் வெள்ளத்தில் மூழ்கி ஏழு பேர் உயிரிழப்பு

புத்தளம், நவ. 15

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளத்தால் மூழ்கி புத்தளம் மாவட்டத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், புத்தளம் மாவட்டத்தில் 36 ஆயிரத்து 370 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 586 பேர் சீரற்ற காலநிலையால பாதிக்கப்பட்டுள்ளனர்.

16 தற்காலிக முகாம்களில் 201 குடும்பங்களைச் சேர்ந்த 691 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும், ஏனையவர்கள் தமது உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர் எனவும் புத்தளம் மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளவர்களுக்குத் தேவையான சமைத்த உணவுகள், குடிதண்ணீர் மற்றும் மருத்துவ வசதிகள் என்பன பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)



# சகல நெருக்கடிகளுக்கும் கொரோனாவை சொல்லி தப்பிப்பதற்கு நிதி அமைச்சர் பஸில் முயற்சிக்கிறார்

## ஹர்ஷ டி சில்வா எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 15

"மக்களின் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன. இந்த நிலையில் சென்றால் அப்பாவி மக்கள் எவ்வாறு உயிர் வாழ்வது? சகல நெருக்கடிகளுக்கும் கொரோனா காரணம் என தப்பிக்கொள்ள நிதி அமைச்சர் முயற்சிகின்றார்" என ஐக்கிய மக்கள் சக்தி எம். பி. கலாநிதி ஹர்ஷ டி சில்வா குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தாய் பிரதான எதிர்க்கட்சியின் சார்பாக ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு சாடிய, அக்கட்சியின் எம். பியும் பொருளாதார நிபுணருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது;

வரவு-செலவு திட்டத்தில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, தமது குடும்ப பின்னணி குறித்தும், தந்தை, சகோதரர்கள், மெதமுலானவை அடிப்படையாக கொண்ட ராஜபக்ஷவினரின் வரலாறுகள், ஆதிக்கம் குறித்தெல்லாம் பேசினார். ஆனால் நாம் அவ்வாறானவர்களல்ல.நாம் நடுத்தர குடும்பத்தை சார்ந்தவர்கள். எமக்கு என்ன தீர்வு உள்ளது என்பதேயே கேட்க வேண்டியுள்ளது.

நிதி அமைச்சரின் வரவு-செலவு திட்டம் ஒரு புஸ்வாணம் போன்றது. இதில் ஒரு உப்புச்சப்பில்லாத வெறும் எழுத்துக்கள் மட்டுமே உள்ளன. மெதமுலான ராஜபக்ஷ பரம்பரையின் பலவீனத்தை முழு உலகத்திற்கும் அவர் வெளிப்படுத்திவிட்டார்.

வரவு- செலவு திட்டத்தில் அவர் முன்வைத்த தரவுகள் எதனையும் நம்ப முடியாது. 2019 ஆம் ஆண்டு இவர்கள் ஆட்சிக்கு வந்த காலத்தில் இருந்து தரவுகளில் மோசடிகளையே செய்து வருகின்றனர். 2020 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் இவர்கள் முன்வைத்த தொகைக்கும், கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கும் இடையில் பாரிய முரண்பாடுகள் இருந்தன. 84900 கோடி ரூபாய் மோசடி செய்துள்ளனர் என்றே கூறவேண்டும். இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறான கீழ்த்தரமான செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இம்முறையும் அதே மோசடிகளே இடம்பெற்றுள்ளன,

தரவுகளில் மட்டுமல்ல மக்களையும் ஏமாற்றும் மிக கேவலமான அரசியலை இந்த அரசு முன்னெடுத்து வருகின்றது. மக்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கையை கொடுத்து ஆட்சிக்கு வந்தவர்கள் இறுதியாக மக்களையே ஏமாற்றிவிட்டனர். புலிகளை தோற்கடித்ததை போன்று நாட்டின் பிரச்னைகளையும் தீர்ப்போம் என்றனர், தமக்கான அதிகாரத்தை பலப்படுத்திக்கொள்ள 20ஆம் திருத்தத்தை நிறைவேற்றினர், தனி சிங்கள அரசாங்கத்தை உருவாக்குவதாக இறுதியாக முஸ்லிம் எம்.பிக்களின் ஆதரவுடன் அதிகாரத்தை கைப்பற்றினர். இப்போது ஆட்சியை கொண்டு நடத்த தெரியாது எதிர்க்கட்சிகளின் மீது பழிசுமத்துகின்றனர்.

அரசின் மாயாஜால பண அச்சடிக்கும் மரத்தினால் இறுதியாக நாட்டை மோசமான பாதாளத்தில் தள்ளிவிடும் நிலையையே முன்னெடுக்கப்படுகின்றது.ரோம் எரிகின்ற நேரத்தில் நீரோ பிடில் வாசித்ததை போன்று ஆட்சியாளர்களும் செயற்படுகின்றனர். மக்களின் நலன்களை கருத்தில் கொண்ட எந்தவொரு யோசனையும் இம்முறை வரவு -செலவு திட்டத்தில் மனச்சாட்சி இல்லாத அரசு இது, மக்களின் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன . இந்த நிலையில் சென்றால் அப்பாவி மக்கள் எவ்வாறு உயிர் வாழ்வது? சகல நெருக்கடிகளுக்கும் கொரோனா காரணம் என தப்பி க்கொள்ள நிதி அமைச்சர் முயற்சிகின்றார்.

நாடு 50 ஆண்டுகள் பின்னோக்கி சென்றுள்ளது. இந்த அரசு நாட்டுக்கு சாபக்கேடு என்றே மக்கள் திட்டுகின்றனர். கடந்த 2021 ஆம் ஆண்டில் வரிகளின் மூலமான வருமானமாக 1556 பில்லியன் ரூபாய் பெற்றுக்கொண்டனர். 2022 ஆம் ஆண்டில் இந்த வரிகளை 2274 பில்லியன் ரூபாயாக அதிகரிக்க தீர்மானித்துள்ளனர். அப்படியென்றால் மேலும் 718 பில்லியன் ரூபாயால் வரிகளை அதிகரிக்க திட்டமிட்டுள்ளனர். இந்த வரியை மக்கள் எவ்வாறு செலுத்துவது?. ரூ 71,800 கோடியை எவ்வாறு செலுத்துவது?

அரசுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்துள்ளன. நாமும் அதனை முன்னெடுக்கவுள்ளோம். கொரோனா நிலைமைகளை கருத்தில் கொண்டு அதற்கு ஏற்ற வகையில் தொடர்ந்தும் போராட்டங்களை நடத்துவோம். சீனா எமது நட்பு நாடுதான், ஆனால் அவர்களின் ஆதிக்கத்துக்கு அளவுக்கு அதிகமாக இடமளித்தமை அரசி ன் தவறு . இனியும் அரசை கொண்டு செல்ல முடியவில்லை என்றால் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு வெளியேறுங்கள், நாம் ஆட்சியை நடத்துகின்றோம்.

அடுத்த 12 மாதங்களில் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடன்களாக செலுத்த வேண்டியுள்ளது. ஆனால், கையிருப்பில் 2 பில்லியன் டொலர்களே உள்ளன. எமக்கு கடன்கள் கிடைக்கும் என்றனர். ஆனால் எவருமே கடன் தரவில்லை. மத்திய கிழக்கில் எமது சேவையாளர்களின் மூலமாக கிடைக்கும் பணத்தை பிணை வைத்து கடன் கேட்கும் அளவிற்கு அரசுள்ளது . இது மிகவும் கேவலமான செயல். இதற்கு முன்வருவது யார் என்றால் விடுதலை புலிகளின் நெருங்கிய நண்பரான சுபாஸ்கரன், இவர்தான் யாழ்ப்பாணம் கிரிகெட் அணிக்கும் உரிமையாளராகியுள்ளார். இவருக்கு விமானப்படை விமானங்கள் கூடக் கிடைக்கின்றன. இவர்கள் இலங்கைக்கு எவ்வாறு புலிகளின் பணத்தை கொண்டு வருகின்றார்கள் என்பதை பார்ப்போம்.

இலங்கை அரசியல் வரலாற்றில் மிகவும் மோசமான அரசு ராஜபக்ஷக்களின் அரசு என்பதை அரசில் உள்ளவர்களே ஏற்றுக்கொண்டுள்ளனர். கொரோனா ஊழல் செய்தனர். வெளிநாட்டு பணியாளர்களின் பணத்தை கொள்ளையடித்தனர், அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரித்து அதிலும் ஊழல் செய்து வருகின்றனர்" என்றார்.




# கூட்டமைப்புமீதான மக்கள் ஆதரவு குறைந்தமைக்கு காரணம் என்ன?

## முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் கருத்து

மட்டக்களப்பு, நவ. 15,

"தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு செல்வாக்கை குறைத்த சாபக்கேடான காலம் நல்லாட்சி அரசு ஆட்சி அமைந்த கடந்த 2015 தொடக்கம் 2020 வரையுமான ஐந்து வருடங்கள்தான். இது மறைக்கமுடியாத உண்மை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்" என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழ் அரசு கட்சி ஊடக செயலாளர் தெரிவித்தார்.

கடந்த 2020, பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து பத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் தெரிவானார்கள், அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு பேர் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவானர்கள் இதற்கு என்ற காரணம் என ஊடகவியலாளர் கேட்டபோது அவர் மேலும் கூறுகையில் தெரித்ததாவது:

"தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 2001இல் உருவாக்கப்பட்டு 2001,டிசெம்பர், 08இல் இடம்பெற்ற தேர்தலில் 18, பாராளுமன்ற உறுப்பினர்களும், 2004, ஏப்ரல்,02 இல் இடம்பெற்ற தேர்தலில் 22, பாராளுமன்ற உறுப்பினர்களும், 2010, ஏப்ரல்,08 இல் இடம்பெற்ற தேர்தலில் 18, பாராளுமன்ற உறுப்பினர்களும், 2015, ஒகஸ்ட் 17 இல் இடம்பெற்ற தேர்தலில் 16, பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் இறுதியாக 2020, ஒகஸ்ட் 05இல் இடம்பெற்ற தேர்தலில் மிக குறைந்த 10, ஆசனங்கள் மட்டுமே பெற முடிந்தது.

இதற்கு பல வேறு வேறு காரணங்களை பலர் கூறினாலும் உண்மையில் பிரதான காரணம் ஆளும் தரப்புடன் இணக்கப்பாட்டு அரசியலே எமது செல்வாக்கை குறைத்தது. 2015, பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நல்லாட்சி அரசில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதிர்க்கட்சி தலைவர் பதவி எடுத்தாலும் எதிர்க்கட்சியாக செயல்படவில்லை. வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பெறும் நோக்கில் ஆட்சியாளருடன் இணக்கப்பாடான ஆட்சியில் தமிழ்தேசிய கூட்டமைப்பு செயல்பட்டதால் அதை மக்கள் ஆளும் கட்சியுடன் இணைந்த ஆளும் தரப்பாகவே எம்மை பார்தனர்.

இதன் தாக்கம் தேசிய அரசில் மட்டும் நின்றுவிடவில்லை கிழக்கு மாகாண சபையிலும் நான்கு கட்சிகளுடன் இணைந்து இணக்கப்பாடான ஆட்சியில் 2015 தொடக்கம் 2017,வரை இரண்டு வருடங்கள் செயல்பட்டதால் சில அபிவிருத்திகள் செய்யமுடிந்தது. ஆனால் நான்கு கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைத்தமையை மறைத்து எமக்கு எதிரானவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூடன் மட்டும் ஏழு உறுப்பினர்களுடன் கிழக்கு மாகாணசபையை பதினொரு உறுப்பினரை கொண்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு முதலமைச்சர் பதவியை விட்டுக் கொடுத்துவிட்டனர் எனவும் முட்டுக்கொடுத்தனர் எனவும் தவறான பரப்புரையை செய்தனர்.

இது தவறான கருத்து. அப்போது கிழக்கு மாகாணசபை மொத்தம் 37, உறுப்பினர்கள் 2015 இல் ஐ.ம.சு.கூட்டமைப்பு 14, உறுப்பினர், த.தே.கூ 11 உறுப்பினர், முஸ்லிம் காங்கிரஸ் 07, உறுப்பினர், ஐ.தே.கட்சி 04 உறுப்பினர், இந்த 36 உறுப்பினர்களுடன்தான் 2015 இல் கிழக்கு மாகாணசபை ஆட்சி நடைபெற்றது. ஜே.வி.பி ஓர் உறுப்பினர் ஆட்சியில் பங்கேற்கவில்லை, இதில் இனரீதியாக, முஸ்லிம் உறுப்பினர்கள் 15 பேர், தமிழ் உறுப்பினர்கள் 12,பேர், சிங்கள உறுப்பினர்கள் 09,பேர்.

இதை புரிந்து கொள்ளாமல் சிலரும் புரிந்து கொண்டு எம் மீது சேறு பூசுவதற்காக வேண்டுமென்று பிரசாரம் செய்தனர். போதாக்குறைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீம் காத்தான்குடியில் முஸ்லிம் மக்களை திருப்த்திப்படுத்தி - தமது ஆதரவை கூட்ட வேண்டுமென்று "முஸ்லிம் காங்கிரசின் இராஜதந்திரத்தின் செயல்பாட்டால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் 11உறுப்பினர்கள் இருந்த போதும், 7 உறுப்பினர்களை கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைமையாகிய நாம் முதலமைச்சர் பதவியை பெற்றுக் கொண்டோம் இதுதான் முஸ்லிம் காங்கிரஸின் இராஜதந்திரம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை எப்படி வளைத்து எடுத்தோம்" என அப்பட்டமான பொய்யை கூறினார். இதை எமக்கு எதிரான சில கட்சிகள் தமிழ்மக்கள் மத்தியில் கடந்த தேர்தலில் பிரசாரமாக பாவித்து எமது ஆதரவை குறைத்தனர் எனவும் மேலும் கூறினார்.

## ஜஸ்மின்...

இந்த வழக்கில் பிரதிவாதிகள் நீதிமன்றில் ஆஜராகவில்லை என்று மாவட்ட நீதிபதி ஏ. டி. சாதுரிகா டி சில்வாவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்தே அவர்களுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டார்.

புலனாய்வு பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே தனக்கு எதிரான - தீங்கிழைப்பு - அவதூறான அறிக்கைகளை முன்வைத்தார் என்று கூறி தென்னாபிரிக்காவை சேர்ந்த மனித உரிமைகள் வழக்கறிஞரும் ஆர்வலரும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் அமைப்பின் ஜஸ்மின் சூகாவிடம் 100 கோடி ரூபாய் கோரி அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளார்.

சுரேஷ் சாலே, அரச மருத்துவரை காவலில் வைக்க வற்புறுத்தினார், மருத்துவ சிகிச்சை அளிக்க மறுத்து தவறான சாட்சியம் அளித்து மிரட்டினார் என்றும் அந்த அறிக்கைகள் குற்றஞ்சாட்டியுள்ளன. தற்போது அமெரிக்காவில் இருக்கும் மருத்துவரை மாநாட்டில் பொய்யான சாட்சியம் அளிக்க கேட்கப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டது.

அரச புலனாய்வு பிரிவின் பணிப்பாளராக உள்ள அவர் இராணுவ அதிகாரி என்பதுடன் பல இராணுவ பட்டங்களையும் கொண்டவர். மதிப்புக்குரிய தொழிலில் இருப்பவர். 1987ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்த தமக்கு பல பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் சுரேஷ் சாலே தனது வழக்கு மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

2020 ஜூன் 01ஆம் நாளன்று முதல் பிரதிவாதியான சூகா தன்னை குறிப்பிட்டு இரண்டாவது பிரதிவாதியால் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்ட அறிக்கைகளை அவர் இயக்கும் இணையத்தளத்தில் வெளியிட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது, மூன்றாவது பிரதிவாதிகள் இணையத்தளத்தில் பொய்யான - தீங்கிழைக்கும் - அவதூறான அறிக்கைகளை வெளியிடுவதற்கு காரணமாக இருந்தனர். இதன்படி தனக்கு ஏற்பட்ட அவமதிப்பும் நட்டமும் ஏற்பட்டுள்ளது. எனவே 100 கோடி ரூபாய்க்கு சமமான அமெரிக்க டொலர்களை தமக்கு நட்டஈடாக தரப்பட வேண்டும் என்றும் சுரேஷ் சாலே தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு அடுத்த வருடம் பெப்ரவரி 22ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஐ)

## மக்களுக்கு...

கின்றேன். நான் இன்று நேர்மையான அதிகாரி என எல்லோராலும் சொல்வதற்கு காரணம் என் தந்தை மற்றும் என்னை கற்பித்து வழிநடத்திய ஆசிரியருமே. குறிப்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் என்னுடன் பல நேர்மையான அரச உத்தியோகத்தர்கள் என்னுடன் இணைந்து பணாயாற்றியதன் காரணமாக ஓர் அணியாக நாங்கள் கடமையாற்றியிருந்தோம். இதன் காரணமாக பெருமளவு நிதியைப் பெற்று யாழ். மாவட்டத்தில் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டிருந்தோம்.

ஏழை மக்களுக்கு உதவி செய்வதற்கு சுற்று நிருபங்கள்கூட தவறாக இருந்தால் அதை மாற்றி அமைத்து செயல்படுத்த முடியும். எனவே, அரச சேவையிலுள்ளோர் ஏழை மக்களுக்கு கட்டாயமாக உதவ முன்வர வேண்டும். அத்துடன் அன்பாகப் பழகி சேவையாற்ற வேண்டும்.

நான் கடமையாற்றிய காலத்தில் எந்த ஓர் அரசியல்வாதிக்கும் முன்னுரிமை கொடுத்துச் செயல்பட்டதில்லை. அது அனைவரும் அறிந்ததே. அனைவருக்கும் சமனாகவே நான் செயல்பட்டேன். அத்துடன், சிலர் பிழையான பல விடயங்களை செய்யச்சொல்லி கூறுவார்கள். நான் கூறுவேன் அவ்வாறு செய்ய முடியாது என எனவே தற்போதுள்ள நிலையில் சில பிழையான விடயங்களை செய்யத் தூண்டியவர்களுடன் என்னால் கடமையாற்ற முடியாது. அத்துடன் அ, ஆ கூறுபவற்றை எல்லாம் செயல்படுத்த முடியாது. நாம் நேர்மையாக கடமை புரியும்போது யாருக்கும் பயப்படத் தேவையில்லை அதுதான் உண்மை - என்றார். (ஐ)

## சவேந்திர...

ஜோன்ஸ் அந்த நாட்டின் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொழில் கட்சியின் சார்பில் பிரிட்டனின் மத்திய க்ரொய்டொன் தொகுதியில் போட்டியிட்டு கடந்த 2017ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவான சாரா ஜோன்ஸ், தன்னுடைய தொகுதியில் வசிக்கும் தமிழ் சமூகத்தினர் மத்தியில் இலங்கையில் இடம்பெற்ற போரின் வடுக்கள் இன்னமும் இருப்பதை உணர முடிவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி உலகில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் நீதியும் பொறுப்புக்கூறலும் உறுதிசெய்யப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

“இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவைத் தடைசெய்யுங்கள்”, என்ற வாசகத்துடனான பதாகையுடன் சாரா ஜோன்ஸ் அவரது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள காணொலி ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

“மனித உரிமைகள் உறுதிசெய்யப்படுவதற்கான தலைமைத்துவத்தை பிரிட்டன் வழங்கவேண்டும். நாம் நீதிக்காகப் போராடவேண்டும். பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான செயல்வடிவிலான நடவடிக்கைகளே தற்போதைய தேவையாக இருக்கின்றன. இலங்கையிலும் உலகம் முழுவதிலும் வாழும் தமிழர்களுக்காக நாம் அதனைத் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும்“ என்றும் சாரா வலியுறத்தியுள்ளார். (ஐ)

## ஐ. நா. விசேட...

வரும் 26 ஆம் திகதி இலங்கை வருகின்றார்.

சில தினங்கள் நாட்டில் தங்கியிருந்து அடிமைத்துவத்தின் சமகால வடிவங்கள் தொடர்பில் ஆராய்ந்து ஐ.நாவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ள அவர், இந்த விடயத்துடன் தொடர்புடைய தகவல்கள் மற்றும் தரவுகளைத் தனக்கு அனுப்பிவைக்குமாறும் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரியுள்ளார்.

குறிப்பாக, தொழிலாளர் உரிமைகள், அடிமைத்துவம், வலுகட்டாயமாகத் தொழிலில் ஈடுபடுத்துதல், சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்துதல் உள்ளடங்கலாக அடிமைத்துவத்தின் சமகால வடிவங்களுடன் தொடர்புடைய தகவல்களை அனுப்பிவைக்கலாம் என்று ரொமோயா ஒபொகாடா தெரிவித்துள்ளார்.

அதன்படி மேற்குறிப்பிட்ட விடயதானங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் தரவுகளை அதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் ohchr-srslaveryShun.org என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடாவிற்கு அனுப்பிவைக்கமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீன உரத்தை...

ஒரு தொகுதியை இலங்கை கொள்வனவு செய்ய ஒப்பந்தம் செய்தது. ஆனால், இலங்கைக்கு அனுப்பப்பட்ட உரத்தில் பாதகமான நுண்ணுயிர்கள் உள்ளன என்று கூறி இலங்கை அரசு நிராகரித்தது.

இரு தடவைகள் நிராகரிக்கப்பட்டும் உரத்துடன் இலங்கை வந்த சீன உரக் கப்பல் நாடு திரும்பாமல் இலங்கையை அண்டிய கடற்பரப்பில் சுற்றி வந்தது. இந்த நிலையில், ஒப்பந்தம் மீறப்பட்டதாகக் கூறி சீனாவின் உர நிறுவனம் குற்றஞ்சாட்டியதுடன் நட்டஈடும் கோரியது.

இந்த நிலையிலேயே, இலங்கைக்கு வழங்கப்படவுள்ள உரத்தை மூன்றாம் தரப்பு ஒன்றின் மூலம் மீண்டும் பரிசோதிக்க இலங்கை சம்மதித்துள்ளது. (ஐ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்தியை பகிர்ந்தவர்மீது விசாரணை!

யாழ்ப்பாணம், நவ. 15

முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வுகள் தொடர்பில் இணையத்தள செய்திகளை சமூகவலைத்தளங்களில் பகிர்ந் தவரை பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் மூன்று மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தினர்.

முன்னாள் ஊடகப் பணியாளரான ஆவரங்காலை சேர்ந்த சி. ஜெயானந்தன் என்ப வரே இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இவரை கடந்த 12ஆம் திகதி - வெள்ளிக்கிழமை 145, கிரு ளைப்பானை வீதி, போல்கோன் ஹோடவில் அமைந்துள்ள பூத் தானை, கெப்பிற்றல் கட்டட 3ஆம் மாடிக்கு பயங்கரவாத தடுப்பு பொலிஸாரால் அழைக்கப்பட்டார். அங்கு, அவரிடம் சுமார் மூன்று மணி நேரம் விசாரணை இடம்பெற்றது.

அவரிடம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பான இணையத்தள செய்தியை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தமை மற்றும் அவரின் ‘வட்ஸ் அப்’ குழு தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அத்து டன், அவரின் கைபேசியும் பரிசோதிக்கப்பட்டது.

இதன்போது, விடுதலைப் புலிகள் தொடர்பானவர்களுடன் தொடர்புகளை பேணு தல், அவர்கள் தொடர்பான அடையாளங்களை வைத்திருத்தல் என்பவற்றுக்கு வழங்கப்படும் தண்டனைகள் குறித்தும் அறிவுறுத்தப்பட்டது.

சில மாதங்களுக்கு முன்னர், கம்பஹா - சீதுவையில் வசிக் கும் அவரின் உறவினர்களிட மும் இவர் குறித்து விசாரிக்கப்பட்ட நிலையிலேயே கடந்த 12ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

இதேசமயம், இவர் கொழும்பில் வெளிவரும் இரு நாளிதழ்களிலும், யாழ்ப்பாணத்தில் வெளியான வார இதழிலும் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சகல தடைகளையும் தகர்த்து நாளை மக்களை திரட்டுவோம்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் ஹேஷா எம். பி.

கொழும்பு, நவ. 15

ராஜபக்ஷக்கள் எவ்வகை சட்டங்களை நடைமுறைப்படுத்தினாலும், அழுத்தங்களைப் பிரயோகித்தாலும் , நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று சிறையிலடைத்தாலும் தடைகள் அனைத் தையும் தகர்த்து நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் பெரும் மக்கள் படையணியை திரட்டுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டு மக்கள் கிராமங்கள் உள்ளிட்ட பகுதிகளில் இதுவரையில் முன்னெடுத்த போராட்டங்களை ஒன்று சேர்த்து நாளை செவ்வாய்கிழமை ( ஐக்கிய மக்கள் சக்தி) பெரும் ஆர்ப்பாட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

நாட்டு மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள போதிலும், ராஜபக்ஷக்கள் தாம் எதனையுமே அறியாதவர்கள்போல தமக்கு மாத்திரம் ஏற்றால்போல் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தேசிய சொத்துக்களை விற்கின்றனர். வெளிநாடுகளிலுள்ள தமது சகாக்களுக்கு அவற்றை வழங்கி அதன் மூலம் கிடைக்கப் பெறும் இலஞ்சத்தினை தமது பைகளில் இட்டுக் கொள்கின்றனர். விவசாயிகளின் நெருக்கடியை தீர்ப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் உரத்திலும் மோசடி செய்கின்றனர். இவற்றை பார்த்து சகித்துக் கொண்டிருக்க முடியாமல் தமது கிராமங்களில் எதிர்ப்பை வெளியிட்டுக் கொண்டிருந்த மக்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஒன்று திரட்டுவோம்.

ராஜபக்ஷக்கள் எவ்வகை சட்டங்களை நடைமுறைப்படுத்தினாலும் , எவ்வகை அழுத்தங்களைப் பிரயோகித்தாலும் , நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று சிறையிலடைத்தாலும் அந்த தடைகள் அனைத்தையும் தகர்த்து போலியான நித்திரையிலிருக்கும் ராஜபக்ஷாக்களுக்கு உணர்த்துவதற்காகவே மக்களை இவ்வாறு ஒன்று திரட்டுகின்றோம்.

செவ்வாய்க்கிழமை முழு கொழும்பையும் சுற்றிவளைத்து விவசாயிகள் உள்ளிட்ட நாட்டு மக்கள் அனைவரதும் பிரச்சினைகளுக்கான தீர்வைக் கோருவோம். 69 இலட்சம் வாக்குகளால் பூரித்துப் போன ராஜபக்ஷ அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் வேலைத்திட்டத்தை நாம் நாளையிலிருந்து ஆரம்பிப்போம் -என்றார்.

## தமிழ் பேசும்...

கடசிகளிடம் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்புக்கான வரைவு ஒன்று இந்த ஆண்டின் இறுதிக்குள் அறிமுகப்படுத்தப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். இந்த நிலையில் அதுபற்றி விசேட கரிசனை அவசியம் என்றும் சம்பந்தன் இதன்போது கூறினார்.

முன்னதாக, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை வலியுறுத்தி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை எழுதுவது தொடர்பில் தமிழ் பேசும் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி கலந்துரையாடின. இதில் தமிழ் அரசு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவை பங்கேற்கவில்லை.

எனினும், இந்த சந்திப்பின் பின்னர் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்கள் சம்பந்தனை சந்தித்து பேசியிருந்தன. இந்த நிலையிலேயே தமிழ் பேசும் கட்சிகளை சம்பந்தன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிதியமைச்சரின்...

சுமை எனவும் நிதி அமைச்சர் தெரிவித்த கருத்து, அரசாங்கத்தின் நிலைப்பாடு என எதிர்க்கட்சி நம்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அரச சேவையை நீர்த்துப் போகச் செய்வதற்கு அரசாங்கம் தெரிந்தோ, தெரியாமலோ தயாராகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அரச சேவையின் ஓய்வூதிய வயதெல்லை அறுபதிலிருந்து 65 வரை அதிகரிக்கப்படுவதாக பிரபல்யமான யோசனையை வரவு - செலவு திட்டத்தில் முன்வைக்கும் அமைச்சர், நாட்டின் அரச சேவை சுமை என மறுநாள் கூறுவதன் மூலம் அவரால் முன்வைக்கப்பட்ட நிலைப்பாடு அவராலேயே மீறப்படுவதாக அமைந்துள்ளதென எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

தேர்தல் காலத்தில் போற்றப்படும் அரச ஊழியர்களை தமது நோக்கம் நிறைவேறிய பின்னர் அரசாங்கம் இவ்வாறு நடத்துவதென்பது அரசாங்கத்தின் உண்மையான பிம்பம் என்பதை அறிந்துள்ளதால் அது குறித்து வியப்படையவில்லை என எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu

## தெற்காசிய உதைபந்தாட்டம்: இலங்கை பெண்கள் தெரிவு அணியில் மகாஜனவின் 4 வீராங்கனைகள்!

யாழ்ப்பாணம், நவ. 15

பங்களாதேஷில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தெற்காசிய உதைபந்தாட்ட போட்டியில் பங்கேற்கவுள்ள இலங்கை பெண்கள் அணியின் தெரிவு குழாமில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் நான்கு வீராங்கனைகள் இடம்பிடித்துள்ளனர்.

19 வயதுக்கு உட்பட்ட தேசிய அணியின் 45 பேர் கொண்ட குழாமிலேயே மகாஜனக் கல்லூரியை சேர்ந்த சி.தர்மிகா, உ.யோகிதா, கிரிசாந்தினி, ம.வலன்ரீனா ஆகிய வீராங்கனைகள் இடம்பிடித்துள்ளனர்.

இவர்கள் அடுத்த கட்ட தெரிவுக்கான பயிற்சி முகாமில் பங்கேற்கவுள்ளனர். (ஐ)

ஆசிய மெய்வன்மை திறன்காண் போட்டி:

## மகாஜன வீராங்கனை சுவர்ணா முதலாமிடம்!



இளையோர் ஆசிய மெய்வன்மை போட்டியில் கோலூன்றி பாய்தலில் முதலாவது தகுதிகாண் போட்டியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மாணவி சுவர்ணா சிவபாதம் 16 வயது பிரிவில் முதலிடம் பிடித்தார்.

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்தப் போட்டியில் சுவர்ணா 2.70 மீற்றர் உயரத்தை கடந்து முதலிடம் பிடித்தார்.

அவர் முதலிடத்தை பிடித்த போதும், அவரால் இளையோர் ஆசிய மெய்வன்மை போட்டிக்கு தகுதி பெறமுடியவில்லை. எனினும், இரண்டாவது தகுதிகாண் போட்டியில் 2.80 மீற்றர் உயரத்தை அவர் கடந்தால் போட்டிக்கு தகுதி பெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இருபது - 20 உலகக்கிண்ணம் சம்பியன் வென்றது ஆஸி.

டுபாய், நவ. 15

நியூசிலாந்து அணியை 8 விக்கெட்களால் வீழ்த்தி இருபது - 20 உலகக் கிண்ணத்தை முதன்முறையாகக் கைப்பற்றியது அவுஸ்திரேலியா.

மிற்செல் மார்ஸ் அதிரடியாக 50 பந்துகளில் 77 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுக்க 7 பந்துகள் மீதமிருந்த நிலையில் 173 ஓட்டங்களைப் பெற்றது அவுஸ்திரேலியா.

தொடக்க ஆட்டக்காரரான டேவிட் வோர்ணருடன் சகலதுறை வீரரான மிற்செல் மார்ஸ் 92 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றார். தொடக்க வீரரான வேர்ணர் 38 பந்துகளில் 53 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து மிற்செல் மார்ஸ் அதிரடியாக ஆடியிருந்தார்.

டுபாயில் நேற்றிரவு நடந்த இருபது - 20 உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு வில்லியம்சன் 10 பௌண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 85 ஓட்டங்களை குவிக்க, நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 172 ஓட்டங்களை குவித்தது. அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் ஹசல்வூட் 3 விக் கெட்களைக் கைப்பற்றினார்.

173 ஓட்டங்கள் என்ற இலக்கைநோக்கி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியாவுக்கு தொடக்கம் கொடுத்த டேவிட் வோர்ணர் அதிரடி காட்ட பின்ஞ் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மிற்சல் மார்ஸ் 6 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 77 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்தார்.

18.5 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் போல்ட் 2 விக்கெட்களை வீழ்த்தினார். போட்டியின் நாயகனாக மிற்செல் மார்ஸும், தொடரின் நாயகனாக டேவிட்வோர்ணரும் தெரிவாகினர். (ஐ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து - உளவளத்துணையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் : டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-துக்லக் தர்பார்,மிஸ்ரர் லோக்கல்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்



6.30 மணி : நலந்தானா-வைத்தியர் அரவிந்தன்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி - வில்வித்தையில் சிறந்தவன் அர்ஜினனா? கர்ணனா




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம் (திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை) மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு